பக்கங்கள்: பதினாறு+IV=20

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 226

## ஐ.சி.ஆர்.சி. கிழக்கில் தனது செயற்பாடுகளை நிறுத்துகிறது

# சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணிகளைக் குறைக்க அரசு பணிப்பு!

## போர் முடிவுற்றதால் இந்த முடிவு என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் பணிசெய்து வரும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை அவற்றின் பணிகளைக் குறைத்துக்கொள்ளுமாறு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

இனிமேல் நாட்டில் போர் நடைபெறமாட்டாது என்பதால், (செஞ்சிலுவை சர்வதேசக் குழு உட்பட) சகல சர்வதேச நிறுவனங்களையும் அவற்றின் பணிகளைக் குறைக்குமாறு நாம் அறிவுறுத்தி உள்ளோம் -

இது விடயத்தில் மிகக் கவனமாக பரிசீலனை செய்த பின்னரே இந்த முடிவுக்கு வந்தோம் -என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

ஜி.சி.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான 4 பக்கங்கள் கொண்ட மாதிரி வினாத்தாள்கள் (இணைப்பு)

★ அசேதன இரசாயனம் I ★ பௌதீகவியல் I
★ வணிகக்கல்வி I ★ பொருளியல் II

தரம் 4 மாணவர்களுக்கான வினாத்தாள்

## மோதல் நடைபெற்ற பகுதிகளுக்கு பொருள்களைக் கொண்டுசெல்ல ஜனாதிபதி செயலணியின் முன்அனுமதி பெறவேண்டும்

கொழும்பு, ஜூலை 10

வடக்கில் முன்னர் மோதல் நடைபெற்ற பகுதிகளுக்குள் செல்ல விரும்புபவர்கள் இதற்கான முன் அனுமதியைப் பெற வேண்டுமெனத் தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## கூ.மொ.வி.நிறுவன யாழ். கிளையை மீண்டும் இயங்கச் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (சி.டபிள்யூ.ஈயின்) யாழ்.நகரில் இயங்கிய கிளையின் கட்டடத்தின் சேதங்களை வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தனா தலைமையிலான குழுவினர் நேற்றுப்பார்வையிட்டனர்.

வின்சர் தியேட்டரில் இயங்கிய கிளைக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழில் அமைச்சர் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஒருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'வணங்காமண்' பொருள்களை 'கொலராடோ' கொண்டு வந்தது! கொழும்புத் துறைமுகத்தில் புதனன்று சோதனை மேல் சோதனை!!

கொழும்பு, ஜூலை 10

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்காக 'வணங்கா மண்' கப்பலில் அனுப்பப்பட்ட பொருள்களை ஏற்றிக்கொண்டு 'கொலராடோ' கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

எனினும், புதன்கிழமை இலங்கை கடற்படையினர் குறிப்பிட்ட கப்பலை கொழும்புத் துறைமுகத்திற்குள் அனுமதிக்க மறுத்ததைத் தொடர்ந்து, குழப்பநிலை தோன்றியது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மரணம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக உறுதி செய்க

### இலங்கை அரசிடம் இந்தியா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 10

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மரணம் குறித்து இலங்கை அரசின் உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தலுக்காகக் காத்திருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரக் காவல் திணைக்களம் இனிப் பாதுகாப்பு அமைச்சின் கீழ்

கொழும்பு, ஜூலை 10

இதுவரை காலமும் கடற்றொழில் அமைச்சின் கீழ் இருந்துவந்த கரையோரத்தைப் பாதுகாக்கும் 'கரையோரக் காவல் திணைக்களம்' பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுகின்றது.

இதற்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தைத் தொடக்கி (16 ஆம் பக்கம் பார்க்க)



## போரின் இறுதிக் கட்டத்தில் மக்களுக்கு பேரிழப்பு என்று கூறிய சர்வதேசம் இனி என்ன சொல்லப் போகிறது?

### கேள்வி எழுப்புகிறார் மஹிந்த சமரசிங்க

கொழும்பு,ஜூலை10

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பாதுகாப்பு வலயத்திலிருந்தவாறு புலிகளின் அழுத்தம் காரணமாக வைத்தியர்கள் சிலர் வெளியிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே சர்வதேசம் இலங்கை அரசின் மீது குற்றச் சாட்டுக்களை சுமத்தியது. தற்போது குறித்த வைத்தியர்கள் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் சர்வதேசம் என்ன கூறப்போகின்றது?- என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த (16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருத்தித்த றை ஸ்ரீராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு நேற்று விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் மாலை அணிவித்து வரவேற்கப்படுகிறார். பிரதித் தூதுவர் விக்ரம் மிஸ்ரி மற்றும் அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோரும் காணப்படுகின்றனர். சேவாச்சிரமத்தால் குருபூர்ணிமா நாளை முன்னிட்டு பிரசுரிக்கப்பட்ட 'குருபூர்ணிமா' நூலை தூதுவர் அலோக் பிரசாத்தும் அரசாங்க அதிபர் கணேஷும் வெளியிட்டு வைப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். இந்தியத் தூதரக அரசியல் அதிகாரி ஷியாமும், சுவா பானந்தாவும் அருகில் காணப்படுகின்றனர்.

## நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை தாமதியாது வசதிகள் கொண்ட இடங்களில் மீளக் குடியமர்த்த உதவுக

## இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்திடம் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை காலம் தாழ்த்தாது, அவர்கள் விருப்பப்படி, சகல வசதிகளும் கொண்ட இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகிய இருவரையும் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம். இந்தியத் தூதுவரிடம் அன்புடனும் பணிவுடனும் இதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் வைத்து சுவாமி சித்ரூபானந்தா இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்திடம் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

1983 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற போர் அனர்த்தங்களால் திண்டாடிய மக்கள் இறைவனின் அருட்பார்வையால் இன்று வேறு பரிமாணத்திற்கு சென்றுள்ளனர். சேவாச்சிரமம் சிங்கள மக்களை என்றும் சகோதர மனப்பான்மையுடன் பேணி வந்ததை யாவரும் அறிவர். இப்பகுதி மக்களும் இலங்கை அரசாங்கத்தின் கீழ் நேர்மைமிக்க குடிமக்களாகவே இருந்து வருகின்றனர்.

இத்தருணத்தில், இந்திய அரசாங்கம் தமது தூதர்கள் ஊடாக சேவாச்சிரமத்தின் பணிக்கு அவ்வப்போது நேசக்கரம் கொண்டு உதவிபுரிந்தமையை நாங்கள் என்றும் மறக்க வாய்ப்பில்லை.

சுவாமி விவேகானந்தரின் கலாச்சார மண்டபத்திற்கு 1998 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஸ்ரீராமகிருஷ்ணமடத்து துறவிகள் அடிக்கல் நாட்டினர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 9 லட்சம் ரூபாவும் அப்போதைய இந்தியத் தூதுவர் திருமதி நிருபமராவ் 10 லட்சம் ரூபாவும் தந்துதவினார்கள்.

சேவாச்சிரமம் ஆன்மீகப் பணிமூலம் இளஞ்சிறார்களுக்கிடையில் நமது பண்டைய விழுமியங்களை வளர்க்க முடியும். நிறைவுறாத கட்டடத்தை ஒப்பேற்ற 50 லட்சம் ரூபா தேவைப்படுமென இங்கு விஜயம் செய்துள்ள தூதுவர் அலோக் பிரசாத் அவர்களிடம் வேண்டுகிறேன் - என்றார். (அ-236)

## கொழும்புத்துறை பாதுகாப்பு வலயத்தில் மீன் சந்தையை மீள இயக்க அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்ந்த பின்னர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்புத்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மீன் சந்தை மீண்டும் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிக்கு நேரில் விஜயம் மேற்கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்துள்ளார்.

கொழும்புத்துறைக்கான பிரதான வீதி உள்ளிட்ட பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்திருப்பதன் காரணமாக அப்பகுதி வாழ் மக்கள் முன்வைத்த சில கோரிக்கைகளுக்கு இணங்க அப்பகுதிக்கு நேரில் சென்ற சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதியை பார்வையிட்டதுடன் பாதுகாப்பு உயரதிகாரிகளையும் அழைத்து கலந்துரையாடினார்.

அப்பகுதியில் மீன் சந்தையைத் திறப்பதற்கான அனுமதியைப்பெற்றுக் கொடுத்திருப்பதுடன் ஏனைய விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு உயர் தரப்பினருடன் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத்துறைக்கான துறைமுக வீதியை பொதுப் பாவனைக்காகத் திறத்தல், அப்பாதையினூடாக ஐயனார் கோயிலுக்குச் செல்ல அனுமதி வழங்கல் மற்றும் அப்பகுதியில் மீன் சந்தையைத் திறத்தல் போன்ற கோரிக்கைகள் அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. (1)

## மெய்வன்மைப் போட்டிக்கு செல்லும் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

மன்னாரில் நடைபெற்றுவரும் மாகாண மட்ட விளையாட்டு விழாவில் மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் யாழ். பாடசாலைகளின் மாணவர்களை பயண ஏற்பாடுகளுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்துக்கு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

காலை உணவு மற்றும் குடிதண்ணீர் என்பனவற்றையும் எடுத்துவருமாறு அவர் கேட்டுள்ளார். (1)

## ஆங்கிலக் கற்கைநெறி தெரிவுப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் 2009/10 கல்வியாண்டில் ஆங்கில மொழிக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் 12 மணிவரை மூன்று நிலையங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபம், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவின் பரீட்சை மண்டபம், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம் ஆகியவற்றில் இந்தத் தெரிவுப் பரீட்சை இடம்பெறவுள்ளது. பரீட்சை மண்டபங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சுட்டிலக்கங்களும் வருமாறு:

இராமநாதன் மண்டபம் - 78, 012 - 78,151 வெளிவாரிப்பிரிவு மண்டபம் - 78,152 - 78, 211, 76,537 - 76, 586 பிராந்திய நிலையம் - 76,587 - 76, 636.


## சிங்கள வகுப்புக்கள்


மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

திருமதி A.C.தேவராஜா

(ஓய்வு பெற்ற நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்)
கே.கே.எஸ். வீதி,
கனனியற் கல்லூரி ஒழுங்கை, இணுவில்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலம் கதிராமன்



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலம் கதிராமன் (07.07.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிராமனின் அன்பு மனைவியும், கனகராணி (டென்மார்க்), நாகராசா (ஐயர், கதிரொளி வீடியோ), தேவராணி (சுவிஸ்), ஜெயராணி, செல்வராணி (கனடா), லலிதாராணி (லண்டன்), கிருபாராணி, ஜீவராணி (லண்டன்), முகுந்தன் (டோகா) ஆகியோரின் அருமைத் தயாரும், தர்மலிங்கம் (அருள்), சோதீஸ்வரி (ஆசிரியை, குருசாமி வித்தியாலயம், கைதடி), நமசிவாயம், சுசீந்திரராஜா, குணலிங்கம், சுரேந்திரன், தர்மராசா (ரகு), சிலோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் அமரர் கந்தையாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பில் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கதிரொளி வீடியோ,
கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
0776165255, 0778020703

### தம்பு நடராசா



சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராசா (07. 07.2009) அன்று ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பறுபதம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், சற்குணதேவியின் அன்புக் கணவரும், கலைச்செல்வன் (பொறியியல் மாணவன் - மொறட்டுவ), வினோத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தியாகராசா (swiss), இந்திரன் (swiss), செல்வராசா (swiss), சின்னராசா (மக்கள் வங்கி, திருநெல்வேலி), ஆகியோரின் சகோதரரும், சறோயினிதேவி (கனடா), சற்குணேஸ்வரி (கனடா), நாகேஸ்வரி, சந்திரராசா (swiss), சந்திரராணி (கனடா), சற்குணேஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை ஜேர்மனியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். 0778739419.

தகவல்
ந.சற்குணவதி
(மனைவி)

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் - நவரத்தினம்



புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நவரத்தினம் நேற்று (09.07.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான தில்லையம்பலம் - சிவகாமி தம்பதியினரின் அன்பு மகனும், அமரர்களான தம்பையா-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் மாணிக்கத்தின் பாசமிகு கணவரும், செல்லம்மா, அன்னபூரணம், சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் பார்மசி, யாழ்ப்பாணம்) அமரர் அருளம்பலம் மற்றும் காந்திமலர், காந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும, ஜெயமங்கள சிரோன்மணி, லீலாதேவி, லலிதாதேவி, விமலாதேவி, ஜெயபாலன், ஜெயச்சந்திரன், ரஜிகலா, விஜிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம், ஜெகநாதன் புண்ணியமூர்த்தி, நிலானி, றஞ்சினி, ஜெயசீலன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜன், திவாகர், நிதர்சன், டாலினி, கஜீபன், மீரா, தஷாங்கனி, நவீனா, நர்மிதா, ஹம்சாயினி, பிரசாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை தொட்டிலடி இல்லத்தில் பி.ப. 2 மணிக்கு நடைபெற்று சுருவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நீதித்துறை சீரமைப்பு அவசியம்

இலங்கையின் நீதித்துறை நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகப் புதிதாகப் பதவியேற்றிருக்கும் பிரதம நீதியரசர் அசோக என்.டி.சில்வா பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக் கின்றார்.

நீதித்துறை நிர்வாகத்தில் மட்டுமல்லாமல் நாட்டில் நீதி வழங்கும் முறைமை தொடர்பாகவும் மக்கள் மனதில் நீடித்துவரும் அழுத்தம் - அல்லது மனப் புழுக்கம் - நீங்குவதற்கு இந்தப் புதிய முயற்சி வழி செய்யவேண்டும் என்பதே பலரினதும் விருப்பும் எதிர்பார்ப்புமாகும்.

இலங்கையில் நீதித்துறை தொடர்பான சட்டங்கள் மிக இறுக்கமானவை. அதுவும் குறிப்பாக நீதிமன்றங்களின் தீர்ப்புகள், நீதி வழங்கும் அதிகாரிகளின் செயற்பாடுகள் போன்றவற்றை விமர்சிப்பது என்பது மிக ஆபத்தான விவகாரமாகும். நீதிவான்கள், நீதிபதிகள், நீதியரசர்கள் போன்றோர் எந்தவித அழுத்தங்கள், நெருக்கடிகள் போன்றவற்றுக்கு ஆளாகாமல் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் தமது பணிகளை ஆற்றுவதன் மூலம் நீதியையும், சட்டம் - ஒழுங்கையும் நிலைநாட்டச் செய்வதற்கு ஏதுவாகவே இப்படி விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட சட்டப் பாதுகாப்புக் கவசம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனாலும், இத்தகைய சட்டப் பாதுகாப்புக் கவசத்தை வைத்துக்கொண்டு வேலியே பயிரை மேய்ந்தாலும் கூட, அதை விமர்சிக்கவோ, சுட்டிக்காட்டவோ வழியில்லை என்பதுதான் யதார்த்தபூர்வமான உண்மையாகும்.

அதுவும் நீதித்துறையின் உச்ச அதிகாரப் பதவிகளில் சர்ச்சைக்குரிய நபர்கள் வந்து அமர்ந்துவிட்டாலோ இந்த நெருக்கடியின் விபரீதம் எல்லை மீறியதாகி விடுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே நீதித்துறை நிர்வாகத்தைச் சீர்செய்ய எத்தனிக்கும் புதிய பிரதம நீதியரசரின் நல்லெண்ண முயற்சி நோக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

நாட்டின் நீதித்துறை அண்மைக்காலமாக சர்வதேச அமைப்புகளால் விமர்சனங்களுக்கு உள்ளான நிலையில் பிரதம நீதியரசரின் இந்தக் கருத்து வெளியாகியிருப்பதை பி.பி.ஸி.சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அண்மைக்காலத்தில் இலங்கை உயர்நீதிமன்றத்தின் மூன்று தீர்ப்புகள், பத்துக்கும் அதிகமான ஜூரர்களைக் கொண்ட - சர்வதேசப் பட்டயங்களின்படி ஸ்தாபிக்கப்பட்ட - மனித உரிமைக் குழுவினால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியமையும், அந்த உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களை மீளாய்வு செய்து திருத்தும்படி அந்த ஜூரர்கள் கொண்ட ஆயம் ஏகமனதாக இலங்கை அரசைக் கோரியிருந்தமையும் கவனிக்கத்தக்கவையாகும்.

பிரபல ஊடகவியலாளர் விக்டர் ஐவனுக்கு எதிரான வழக்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நல்லரட்ணம் சிங்கராசாவுக்கு எதிரான குற்றத் தண்டனைத் தீர்ப்பு, மனித உரிமைகள் வாதியான அன்ரனி மைக்கல் இமானுவல் பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு ஆகியவை தொடர்பான விடயங்களில் இலங்கை நீதிமன்றங்களின் செயற்பாடுகளே சர்வதேச ஜூரர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகின.

இதேசமயம், இலங்கை நீதித்துறை தொடர்பாக சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு இம்மாத ஆரம்பத்தில் விடுத்திருக்கும் பகிரங்க அறிக்கையும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

இன வேறுபாடின்றி அனைவருக்கும் மனித உரிமைகளையும், நீதியையும் பெற்றுக்கொடுத்து உறுதிப்படுத்துவதில் இலங்கை நீதித்துறை நியாயமாகவும், பக்கச்சார்பின்றியும் செயற்படுவது மாதிரித் தோற்றவில்லை என அந்த அமைப்பு அப்பட்டமாக விமர்சித்திருக்கின்றமையும் மறைக்கக் கூடியதல்ல.

முன்னைய பிரதம நீதியரசரின் கீழ் இலங்கை நீதிமன்றங்களின் செயற்பாட்டைக் கடுமையாகக் குறைகூறியுள்ள அந்த அமைப்பு, மனித உரிமைகள் மற்றும் அரசமைப்பு உரிமைகள் நீதிமன்றங்களின் மூலம் முற்றாக மதிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்படும் நிலைமை பேணப்பட்டு உறுதி செய்யப்பட்டால் மட்டுமே நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய தேசிய நல்லிணக்கத் தீர்வு ஒன்று எட்டப்பட முடியும் என்ற யதார்த்தக் கள நிலைவரத்தையும் விளக்கியிருக்கின்றது.

இதுவரை காலமும் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பல தீர்ப்புக்களை மீளாய்வு செய்யக் கோரும் பல கோரிக்கைகள் உயர்நீதிமன்றுக்கு இப்போது வரத் தொடங்கியிருக்கின்றன. அதுவும் உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பதவி - பிரதம நீதியரசர் பதவி - கைமாறிய கையோடு இந்த விண்ணப்பங்கள் வருகின்றமை, இதுவரை காலமும் இலங்கை நீதித்துறையில் நிலவிய ஏதோ ஒரு சார்பு அழுத்தம் பற்றிய செய்தியைத் தானாகவே விளங்க வைக்கின்றது என்பதும் மறுக்கக்கூடியதல்ல.

இலங்கையில் நீதித்துறையில் பணி மாற்றங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் விரைவில் மாற்றங்கள் அறிவிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

அதற்குமுன்னர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு முழு அளவில் நீதியாகச் செயற்படுவதாயின், முதலில் அந்த ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதே பக்கச் சார்பற்றதாக - சுயாதீனமானதாக - முன்னெடுக்கப்படுவது முக்கியமாகும்.

அத்தகைய ஆணைக்குழுவை சுயாதீனமான முறையில் நியமனம் செய்யும் அதிகாரம் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸில் ஸ்தாபிக்கப்படுவது அதற்கு அவசரமானதாகின்றது.

எனவே, நீதித்துறை சீரமைக்கும் நல்ல முயற்சியின் பூர்வாங்கக் கட்டமாக அரசமைப்புக் கவுன்ஸிலை உருவாக்குவதற்கான அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு, செயற்படுத்தப்படுவது மிக அவசியமான தேவையாகிறது.

இது எல்லாம் இந்தத் தேசத்தில் நடக்கக் கூடியவையா?

பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர, பொதுமக்களுக்கு இதில் வேறு வழி ஒன்றுமில்லை.

# கொழும்பு விலையில் பொருள்களை யாழ்ப்பாணத்தில் பெற நடவடிக்கை

## அமைச்சர் பந்துல யாழ்.செயலகத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்பில் பொருள்கள் விற்பனை செய்யப்படும் விலைக்கே யாழ்ப்பாணத்திலும் மக்கள் பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் கொழும்பு விலையில் பொருள்களைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில் மூன்று கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் (சதோச) இன்னும் 10 நாள்களில் திறந்து வைக்கப்படும். இவ்வாறு வர்த் தகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துலகுண வர்த்தன யாழ். செயலகத்தின் வர்த்தகர்கள், பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தினர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின் போது தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, மின்சக்திப் பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, சமூகசேவைகள், சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சதோச தலைவர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய குழுவினர் கலந்து கொண்டனர். யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன உரையாற்றுகையில் தெரிவித்தமை வருமாறு:

கட்டடப் பொருள்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு அங்கு விற்பனையாகும் விலைக்கே இங்குள்ள மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் அதற்கென அமைக்கப்படும் மையத்தில் சேர்க்கப்பட்டு தென்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் கொள்வனவு செய்யக்கூடியதாகவும், இங்கிருந்து வரும் பொருள்களைமாலை 4.30 மணிக்கே கொழும்பில் களஞ்சியப்படுத் தக்கூடி யதாகவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் -என்றார்.



ஓமந்தையில் பொருள்கள் சோதனைக்காக இறக்கி ஏற்றப்படுவதாகவும் அதனால் கூடுதல் செலவுகள் ஏற்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களின் லொறிகளில் பொருள்களை எடுத்துவர அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

400 லொறிகள் இதற்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் இந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (50-111)

## வேலணை - யாழ்.இ.போ.ச. பஸ் மாலை 4.30 மணிக்குப் புறப்படும்

நல்லூர், ஜூலை 10

வேலணை வங்களாவடியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான மாலைநேர குறுந்தூர இ.போ.ச. பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவை தினமும் மாலை 4.30 மணிக்கு வேலணை வங்களா வடிச் சந்தியில் இருந்து யாழ்.நகருக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையான அரச ஊழியர்கள் வேலணைப் பகுதியில் உள்ள பல்வேறு திணைக்களங்களுக்குத் தமது கடமையின் பொருட்டு வேலணைக்குச் சென்று வருகின்றனர்.

இவர்கள் போக்குவரத்து வசதியின்மை காரணமாக தமது முழுநேரக் கடமையைச் செய்யமுடியாத நிலையில் அலுவலக நேரத்திற்கு முன்பாகவே தமது இடங்களுக்குத் திரும்பிச் செல்லவேண்டிய நிலையில் உள்ளனர்.

அரச ஊழியர்கள் தமது முழுநேரப் பணியில் ஈடுபடக்கூடியதாகவும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அதன் பின்னர் செல்லக்கூடியதாகவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த வேலணைப் பிரதேச செயலர் பா.நந்தகோபாலன் எடுத்த நடவடிக்கையின் பயனாக இ.போ.ச. பஸ் சேவை தினமும் மாலை 4.30 மணிக்கு வேலணை வங்களா வடியில் இருந்து யாழ். நகருக்கான பஸ் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (50-111)

## 'அன்புடை நெஞ்சம்' குறுநாவல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

நெல்லை லதாங்கியின் 'அன்புடை நெஞ்சம்' குறுநாவல் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் வாழ்த்துரையையும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் அறிமுக உரையையும் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

முதன்மைப் பிரதிகளை தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் எம்.பரமானந்தன், மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் எம்.சிவநேசன், வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் எஸ்.கிருஷ்ணானந்தன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

நூல் ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம், அம்பன் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் சு.குணேஸ் வரன் ஆகியோர் நிகழ்த் துவர். (203-55)

## உயர்மட்ட வர்த்தகத் தூதுக் குழுவுடன் வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள உயர்மட்டத் தூதுக்குழுவினருக்கும் ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. குடாநாட்டிலுள்ள மருந்தக உரிமையாளர், வாகன உதிரிப் பாகங்கள், கட்டடப் பொருள்கள் கணனி மின் உபகரணங்கள் விற்பனையாளர்கள், காலணி விற்பனையாளர்கள், விவசாய மற்றும் கடற்றொழில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வோர் எதிர்காலத்தில் தொழில் செய்ய விரும்புபவர்கள் ஆகியோரை இந்தக் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (203-111)

## தென்மராட்சியில் சேதமடைந்துள்ள இந்து ஆலயங்கள் புனரமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் சேதமடைந்த இந்து ஆலயங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான விவரங்கள் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

சேதமடைந்த இந்து ஆலயத்தின் பரிபாலன சபையினர் ஆலயத்தின் பெயர், முகவரி, கிராமஅலுவலர் பிரிவு, இந்துசமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்த இலக்கம், பாதிப்பின் தன்மை, புனரமைக்க ஏற்படும் உத்தேச செலவு, உத்தேச வரைபடம் ஆகிய விவரங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உடனடியாக கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50-207)

## தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தமிழ்த்தினப் போட்டி நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிக்கு நடுவர்களாக நியமிக்கப்பட்டவர்களை நாளை சனிக்கிழமை வருகை தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (204-207)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 27 | 11.07.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ. 10.04 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மு.ப. 09.19 வரை |
| சுபநேரம்: | 02.59 - 04.29 |
| ராகுகாலம்: | 08.59 - 10.29 |

## 'சதோச'வை மீண்டும் செயற்படுத்த வின்சர் தியேட்டர் புனரமைப்பு

யாழ்பபாணம், ஜூலை 10

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதோச) அமைந்துள்ள வின்சர் தியேட்டர் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை மீண்டும் செயற்பட வைப்பதற்காகவே இந்தக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன, 'சதோச'த் தலைவர் நளின் பெர்னாண்டோ, சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று அந்தக் கட்டடத்தைப் பார்வையிட்டனர்.

இதனையடுத்து அந்தக் கட்டடத்தை புனரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாகப் பொறியியலாளர்களுடன் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-111)

## நலன்புரி சிறார்களுக்கு பால்மா அன்பளிப்பு

கரவெட்டி, ஜூலை 10

வல்வை முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு வழங்கவென ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பால்மா வகைகளை தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசனிடம் கடந்த 2ஆம் திகதி கையளித்துள்ளனர். (204-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடித் தேவை

ஒரு பிரபல தனியார் பாடசாலையில்
தொடர்பாடல் உதவியாளராக ஆங்கிலம், தமிழ்,
கணனி தேர்ச்சியுடைய 19-30 வயதிற்குட்பட்ட
பெண் உத்தியோகத்தினர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0774083656
முகவரி:- 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்..


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் செ.அபிராமி

(இலிகிதர், பருத்தித்துறைப் பிரிவு, இலங்கை செஞ்சிலுவை சங்கம்)

எமது பருத்தித்துறைப் பிரிவுக்கும் யாழ்.கிளைக்கும் ஆக்கபூர்வ தொண்டினை நல்கிய நீண்ட நாள் உறுப்பினராக, தொண்டராக மக்களுக்காக உழைத்த ஒரு சிறந்த பெண்மணியாவார்.

அவரது இழப்பு எமது சங்கத்துக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா ஆண்டவருடன் சங்கமமாகி சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் - பிரிவு

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், தொண்டர்கள்.

## விழிசுரக்கும் கண்ணீரால் நாம் செலுத்தும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 21 |
| 01 | 06 |
| 1942 | 2008 |



### அமரர் தர்மலிங்கம் சண்முகலிங்கம்

திதி: 10.07.2009

இறைவனோடு என்றும் இன்புற்று இருக்கவும்
இனிய அன்னை இனிதே பெற்றிட
இறைவா நீ உதவிடுவாய்!
மறைந்திடுமோ உங்கள் நினைவுகள்!
மறந்திடுமோ எங்கள் இதயம்!

26/2, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(86893)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயராசலிங்கம் சாந்தநாயகி

மருதடி மேற்கு வீதி, சாவகச்சேரி வடக்கை பிறப்பிடமாகவும் மடத்தடி வீதி, சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராசலிங்கம் சாந்தநாயகி நேற்று (09.07.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயராசலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளும் சதீசன், றமணன், மற்றும் செந்தாளன் , செந்தூரன் (யாழ்/மீசாலை விக்னேஸ்வரா ம.வி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தகோபன் (பிரான்ஸ்), ஜெனனி (ஹொலண்ட்), ஜெயப்பிரதா ஆகியோரின் சிறியதாயாரும், சிவகுமார் (C.T.B. - நடத்துனர் பருத்தித்துறைசாலை), சிவானந்தன், சிவதாசன், காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

தகவல்: கணவர் (லிங்கம்).

### தில்லைநாதர் பத்மநாதன்



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதர் பத்மநாதன் 08.07.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர் - வயிரமுத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் விஜயலட்சுமி, பார்த்தீபன், கோகிலராணி, பகீரதன், ஆகியோரின் அன்புத் தகப்பனும் புவனேஸ்வரி, தவமணி, வசந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிர்காமமூர்த்தி, ரஜனி, குலநாயகம், சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், மகேந்திரன், கனகலிங்கம், மற்றும் வரதராஜன், சிவலோகநாதன், திருஞானசம்மந்தர், ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆதவன், திவ்வியன், யுஷாந், அபிநயா, யஷ்மி, ஏஞ்சலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26,நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

தகவல்:
மனைவி.

## வலிகாமம் வலயத்தில் நாளை செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை- 10

க.பொ.த. உயர்தர வகுப்பில் வணிகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படும் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (1-31)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை- 10

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரத்தில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 5 மணி வரை மானிப்பாய் ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-38)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 10

சாவகச்சேரி நகரசபையினர் உள்ளூராட்சி வாரம் - 2009 இன் நூல் நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் புலவர் சி.அமிர்தநாதன் குருக்களை பாராட்டி கௌரவிக்கவுள்ளனர்.

கௌரவிப்பு நிகழ்வு இன்று மு.ப. 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறுமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-207)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் சங்கக் கூட்டம்

நவாலி, ஜூலை 10

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் தவறாது சமுகம் தருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

## நயினை சிறப்பு நிகழ்வு இன்று வானொலியில்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைக்கட்டுப்பாட்டாளர் செல்வி கௌசல்யா கோவிந்தராஜன் தயாரித்த கலாபூஷணம் சாஹித்தியமணி சிவஸ்ரீ தயாளனின் ''நலம் தரும் நயினை நாகபூஷணி'' என்னும் தலைப்பிலான சங்கீத கதாப்பிரசங்கம் இன்று இரவு 10 மணி முதல் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையில் மீண்டும் மறு ஒலிபரப்புச் செய்யப்படுகிறது. (1)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ''சொல்லடி சிவசக்தி'' என்னும் பொருளிலும், நாளை சனிக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு சிதம்பரநாதன் சசீவன் ''மகாகவி ஆக்கிய மகாகாளி'' என்னும் பொருளிலும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (204)


## தவறிவிட்டது

நேற்று (09.07.2009) கஸ்தூரியார் வீதியில் இருந்து சட்டநாதர் வீதி இளம் கலைஞர் மண்டபத்திற்கு செல்லும் வழியில் அல்லது மண்டபத்தில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் உள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

''கஜி வீடியோ'',
486, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777274462

## தவறிவிட்டது

மீசாலை இலந்தைக் கூடல் வீரகத்திப் பிள்ளையாரின் பாவனையிலுள்ள (பவுண்) சிறிய உருத்திராக்க மாலை நல்லூருக்கும், நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. யாராவது கண்டெடுத்தால் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே.இல.: 077 2269936

## தேவை

யாழ்.நகரில் அமையவுள்ள தனியார் நிறுவன [illegible] 2006@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விபரத்தையும் தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் அனுப்பி வைக்கவும். யாரும் விண்ணப்பிக்கலாம். தொலைபேசி எண் முக்கியம்.

UNIVERSITY OF JAFFNA, SRILANKA
FACULTY OF MEDICINE

**Postponement of Academic Programme for the 30th (2007) Batch**

The Academic Programme for the 30th (2007) Batch (Term I) scheduled to commence on 20th July 2009 has been **postponed.** The new date will be notified later.

**Registrar.**
2009.07.09

(C/559446)


## மரண அறிவித்தல்கள்

### கனகராயன் யோகவனம்

(முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு மாளிகாவத்தையில் வசித்தவருமான கனகராயன் யோகவனம் நேற்று முன்தினம் 08.07.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராயன்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் நவரத்தினமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பசுபதி, சிவசம்பு ஆகியோரின் சகோதரரும் யோகநாதன், யோகநாயகி, யோகறட்ணா, யோகராணி, யோகேந்திரா, யோகசந்திரிகா, யோகசந்திரன், யோகறஞ்சன், யோகானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2009) சனிக்கிழமை இல 3/1, பாரதி வீதி, மாளிகாவத்தை, கொழும்பு 10இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
சுன்னாகம்.

(86894)

தகவல்:
க.ஆனந்தராசா

### திருமதி நடேசு பராசக்தி



கொடிகாமம், கோயிலாமனையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு பராசக்தி (03.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், பரமு நடேசுவின் அன்பு மனைவியும், ஆறுமுகநாதனின் அன்புச் சகோதரியும், லோகநாதன், இரவீந்திரன் (தபாலகம், அச்சுவேலி), கௌசலா, லோகநாயகி, சிவலோகநாதன், பரலோகநாதன், கங்காதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாரஞ்சினி, சசிகலா, செல்வநேசன், அகிலானந்தன், சயிலா, ஜெயசுதா, ருஷ்யந்தி, சுபர்ணா ஆகியோரின் அன்பு மாமியும், யசிக்கா, ஜெனார்த்தனன், மிதுசனா, யதுசனா, துஜிந்தன், ஜெயசுதன், பிரதீப், ராகவி, ரஜீவ், சகானா, சாருஜன், சுருத்திகா, சுஜிக்கா, கிஷோர், பௌசன், மபிஷா, மபீனா, அகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்
ந.இரவீந்திரன் (மகன்)
(தபாலகம், அச்சுவேலி).

### சின்னத்துரை மயில்வாகனம்



சாரதா வீதி,. சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயில்வாகனம் கடந்த (07.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தசாமியின் (கனடா) அன்புச் சகோதரனும் பாஸ்கரன் (சுவிஸ்), சுதாகரன் (கனடா), பிரபாகரன் (சுவிஸ்), சுதர்ஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரிக்கா, கோகிலா, டயானி ஆகியோரின் மாமனாரும் நர்மதா, பவிந், சர்மிதா, அபிஷா, பிரவிந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவீடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
N.மகேந்திரன் (பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'நிக்கொட்' நிறுவனத்தினரால் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் எஸ். தியாகலிங்கம் நிற்பதையும் முதல் படத்திலும், மேலதிக மாகாண கல்வி அலுவலக பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் உரையாற்றுவதையும் 'நிகொட்' நிறுவனத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் ஆர். சிவரூபன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படம்: நந்தன்)*

# பரிசில் வழங்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை10

கரணவாய் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கவுள்ளார். (204-253)

* * *

கோப்பாய், ஜூலை10

கோப்பாய் வடக்கு ஞானபண்டித சைவவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சித்தாந்தபானு கலாநிதி அமரர் சிவஸ்ரீ சோ.சுப்பிரமணியக் குருக்களின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கோப்பாய் சித்திர வேலாயுதசுவாமி ஆலய மண்டபத்தில் சங்கத் தலைவர் த.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை ஆலய பிரதம குரு பூரணகீதச்சந்திர குருக்களும், சிறப்புரையை ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும், நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மாவும் நிகழ்த்துவர். (203-72)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை10

யாழ்ப்பாணம், சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் மு.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சரவணை சேவா மன்ற அனுசரணையுடன் நடைபெறும் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலனும் சிறப்பு விருந்தினராக தீவகக்கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் திருஞானமும், சரவணை சேவா மன்றத் தலைவர், முன்னாள் அதிபர் கு.கணேசலிங்கமும் கலந்து கொள்வர். (1-7)

## கற்றல் உபகரணங்கள் மாணவருக்கு வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை10

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை விநியோகித்துள்ளனர்.

கடந்த வருடம் சங்கத்தில் இயங்கிய 335 அங்கத்தவர்களினதும் 32 பணியாளர்களினதும் பிள்ளைகளுக்கென கற்றல் உபகரணங்கள் விநியோகித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## கோண்டாவில் மேற்குப் பகுதியில் ஒரே நேரம் ஐந்து வீடுகளில் திருட்டு

வலி.வடக்கு, ஜூலை 10

கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கையில் பட்டப் பகல் வேளையில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களினால் அப்பகுதிப் பொதுமக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள ஐந்து வீடுகளில் பட்டப்பகல் வேளையில் ஆள்கள் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டினுள் நுழைந்த திருடர்கள் எட்டுக்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள், பணம், நகைகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

பகல் வேளைகளில் வீட்டில் உள்ளவர்கள் வேலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் செல்வதை அவதானித்து அந்த நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி திருட்டுகள் இடம்பெற்று வருகின்றன.

ஆசிரியர்கள், அரச ஊழியர்களின் வீடுகளிலேயே இத்தகைய திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக கிராம அலுவலர் மூலம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-86)

## கிராம அலுவலரை கடமை செய்யவிடாது தடுத்த நபருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது

யாழ்ப்பாணம், ஜூலை10

கிராம அலுவலரைக் கடமை செய்ய விடாமல் தடுத்த நபர் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோரியதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

வரணி, நாவற்காடு கிராம அலுவலர் தனது அலுவலகத்தில் நிவாரண விநியோக அட்டைகள் வழங்கிக் கொண்டிருந்த வேளையில் கடமை செய்யவிடாமல் தடுத்தாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் சம்பந்தப்பட்டவரை கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

கடந்த வாரம் இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டு கிராம அலுவலரிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார். இதனையடுத்து இந்த நபரை எச்சரிக்கை செய்து நீதிவான் அவரை வழக்கிலிருந்து விடுவித்தார். (203-207)



கடந்த ஆறாம் திகதி யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த தொழில் பயிற்சி அமைச்சர் பியசேன கமகே, மின்சக்தி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினால்ட்குரே, மேல் மாகாண மீன்பிடி கைத்தொழில் அமைச்சர் நிமல்லான்சா ஆகியோர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.பணிமனைக்கு விஜயம் செய்து யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம். (1)

## கல்விக் கண்காட்சிகள்

யாழ்ப்பாணம், ஜூலை10

கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை அதிபர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரனிஸ்லஸ் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் தீவக் பொறுப்பாளர் ந.ஜெயகாந்தன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204-267)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை10

தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு க.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (204)




## மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் காயமடைந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை10

வீதியில் கண்டெடுத்த மர்மப் பொருள் ஒன்றைப் பிரித்துப் பார்த்தபோது அது வெடித்துச் சிதறியதில் இளைஞர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கச்சாயில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீலிங்கம் (வயது 22) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (203-207)

## வினைத்திறமை காண் பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம், ஜூலை10

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் துணைக்குழுவினால் மாகாணத் திணைக்களச் சாரதிகளுக்கு நடத்திய வினைத்திறமைகாண் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றியோரின் பெறுபேறுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## விபத்தில் காயமடைந்தவர் 7 நாள்களின் பின் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை10

பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்குச் சமீபமாக கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காமையால் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

கடந்த முதலாம் திகதி முற்கபல் 11 மணியளவில் நடந்த விபத்தில் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சந்திரமலர் (வயது 55) என்பவர் காயமடைந்தார்.

படுகாயமடைந்த நிலையில், சுய நினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் செவ்வாயன்று மரணமானார். (1-203)

## உள்ளூராட்சி வார விழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை10

உள்ளூராட்சி மன்றங்களில் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவிருந்த உள்ளூராட்சி வார விழா நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் அறிவித்துள்ளார். (204-207)

# தமிழியலின் அனைத்துத் துறைகளிலும் அறிவொளி பாய்ச்சியவர் கவிஞர் முருகையன்

## அஞ்சலி உரையில் துணைவேந்தர்

சுன்னாகம், ஜூலை 10

தமிழியலின் அனைத்துத் துறைகளிலும் அறிவொளி பாய்ச்சியவர் கவிஞர் முருகையன்.

மரபார்ந்த தமிழ்ப்புலமையும், அறிவார்ந்த புலமையாளர்களுடனான உறவும் அவரை எங்கள் காலத்தின் தலைமைக் கவிஞனாகவும் புலமையாளனாகவும் விளங்கச் செய்தது.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

தேசிய கலை இலக்கியப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட முருகையன் நினைவஞ்சலிக்கூட்டம் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி தலைமையில் நடைபெற்றபோது அஞ்சலியுரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

துணைவேந்தர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

ஈழத்துக் கலை இலக்கிய அசைவியக்கத்தை வலுப்படுத்தி வழிகாட்டிய முருகையன் மார்க்சிய சித்தாந்தத்தை நியமமாகக் கொண்டு சமூக நோக்கோடும் கருத்துத் தெளிவோடும் இலக்கியம் படைத்தவராவார்.

திசையறியாது நிற்கும் தமிழின வாழ்வுக்கு அவரது கவிதைகள் திசைகாட்டியாக அமைந்துள்ளன என்றார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அங்கு உரையாற்றும்போது:

ஈழத்தில் தோன்றிய கவிஞர்களில் பன்முக ஆற்றல் கொண்ட தனித்துவமான கவிஞராக முருகையன் [illegible]

பண்டைய [illegible] முகமோ குணங்குறிகளோ தெரியாது இன்றுவரை நிலைத்து நிற்கின்றன.

அதுபோலவே முருகையனது கவிதைகளும் நிலைத்து நிற்கத்தக்கன - என்றார்.

எழுத்தாளர் செங்கைஆழியான் உரையாற்றும்போது:

கருத்திலும் எழுத்திலும் தனித்துவமான கவிதைகளை எழுதிய முருகையனின் வெற்றிடம் யாராலும் நிரப்பப்பட முடியாதது.

அவர் நாடகத்துறையிலும், சிறுகதைத் துறையிலும்கூட சிறப்பான பங்களிப்பை ஆற்றியுள்ளார் - எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் இ.சிவச்சந்திரன் பேசும்போது:

முருகையன் மிகப்பெரிய ஆளுமையாக எம்முன் வாழ்ந்துள்ளார்.

அழகிய கிராமிய வாழ்வின் அனுபவங்கள் அவர் கவிதைகளில் அதிகம் வெளிப்படுகிறது - என்றார்.

இக்கூட்டத்தில் பேராசிரியர் ப.சிவநாதன், எழுத்தாளர்களான க.தணிகாசலம், க. [illegible] ஐ.சாந்தன், சி.ரமேஷ் ஆகியோர் உட்பட பலரும் உரையாற்றினர். கவிதாஞ்சலியும் இடம்பெற்றது. (203-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை ஹென்றியரசர், மானிப்பாய் மகளிர் அணிகள் வடமாகாண உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியன்கள்

## சண்டிலிப்பாய் கோட்டம் இரண்டு முதலிடங்களை வென்றது



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி

படங்கள்: நேசன், சரவணன்.



மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் முதலிடங்களைப் பெற்றுச் சம்பியன்களாக வென்றுள்ளன.

இதன்மூலம் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம் வடமாகாணப் போட்டியில் இரண்டு முதலிடங்களை வென்றது.

இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இத்றகென வீரர்கள் குறிகட்டுவான் ஊடாகவும் காங்கேசன்துறை ஊடாகவும் மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மூன்றாம் இடத்தை வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

ஆண், பெண் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியனவும் பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இளவாலைக் கன்னியர்மடம் மகாவித்தியாலமும் வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளாகும். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தீவக வலயத்தைச் சேர்ந்தது. (50-86-112)

# அதிபர்களின் அக்கறையும் மாணவர்களின் அர்ப்பணிப்பும் சண்டிலிப்பாய் கோட்டத்துக்கு 2 முதலிடங்களைத் தந்தன

## கல்விப்பணிப்பாளர் செ.கந்தசாமி பெருமிதம்

வலி.வடக்கு,ஜூலை10

கல்லூரிகளின் அதிபர்கள் காட்டிய அக்கறையும் அர்ப்பணிப்புடன் மாணவர்கள் காட்டிய ஆர்வமுமே வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில்வலிகாமம் கல்வி வலயத்தின் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்வதற்குக் காரணம்.



மேற்கண்டவாறு தெரிவித்தார் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.கந்தசாமி.

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முறையே இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆண்கள் பிரிவிலும், மானிப்பாய் மகளிர் கல்லூரி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளதுடன் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இது தொடர்பாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலத்தில் சண்டிலிப்பாய் கோட்டம் ஏனைய விளையாட்டுப் போட்டிகளிலும் பிரகாசித்துள்ளது. இப்போது நீண்ட கால இடைவெளியின் பின்னர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உடற்பயிற்சிப் போட்டியில் களமிறங்கி மாகாணச் சம்பியனாக வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இதேபோன்று இளவாலை கன்னியர் மடம் பாடசாலையும் முதல்தடவை களமிறங்கி மாகாணத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேசிய மட்டத்தில் சம்பியனாகிச் சாதனை படைத்தவர்கள்.

இந்தமுறை நடைபெறும் தேசிய மட்டப் போட்டிகளிலும் எமது கோட்டப் பாடசாலைகள் சம்பியன்களாக வரும் என்பது உறுதி. யாழ்.மாவட்டத்தில் தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு நான்கு பாடசாலைகள் செல்லவுள்ளன.

இந்தப் பாடசாலைகள் அங்கும் திறமைகளை வெளிப்படுத்தி தேசிய மட்டத்திலும் சம்பியன்களாக வரவேண்டும் என்றார். (50-86)

## இளவாலை ஹென்றியரசர் கல்லூரித் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தின விழாவை முன்னிட்டு மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் இளவாலையில் இருந்து ஆரம்பித்து பெரியவிளான், பண்டத்தரிப்பு, தொட்டிலடி, அளவெட்டி ஆகிய பிரதேசங்கள் ஊடாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-112)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை10

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வல்வை நெடிய காட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளைமுகாமையாளர் பிரதம விருந்தினராகவும், வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் கு.நகுலாம்பிகை, வடமராட்சி முன்பள்ளி வலய இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ், பொலிகண்டி மேற்கு கிராம உத்தியோகத்தர் சி.சிவபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204-70)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை10

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் பாலர் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் உடுவில் மான்ஸ் கல்லூரி பிரதி அதிபர் அ.பிரதாபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (204)




# 15 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்; யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியன்

வலி.வடக்கு,ஜூலை10

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் ஆரம்பம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளுக்கும் கிடைத்த பல கோல்கள் பெறும் சந்தர்ப்பத்தை தவறவிட்டபோதிலும் முதல்பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி ஒரு கோலை பெற்றுக்கொண்டது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் துடிப்புடன் களமிறங்கிய போதிலும் அந்த வாய்ப்புக்களை யாழ்.மத்திய கல்லூரியே பெற்றுக்கொண்டது.

மேலும் இரண்டு கோல்களைப் பெற்று யாழ்.மத்திய கல்லூரி வெற்றியைத் தனதாக உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்.மத்திய கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

அடுத்த சுற்றில் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் விளையாட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளது. (50-86)



அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.க[illegible] உரையாற்றுவதையும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ், யாழ். செயலக நலன்புரிக் கழகத் தலைவர் [illegible]நேசன், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள், யாழ்.செயலக அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் 'கமநெகும'வின் கீழ் 65 திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 65 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் 32.47 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏற்பட்ட 'நிஷா'ப்புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக அதனை ஈடுசெய்யும்முகமாக உற்பத்தி தொடர்பான துறைசார்ந்த திணைக்களங்களினால் தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைச்சினால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்களை 180 நாள்களுக்குள் நிறைவேற்றி முடிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## நலன்புரி நிலைய மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பல நிறுவனங்களின் ஒத்துழைப்பால் 14 லட்சத்து 59 ஆயிரத்து 650 ரூபாவை கடந்த ஜூன் மாதம் இந்து அமைப்புக்களின் ஒன்றியத் திடம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் மக்கள், இந்து இளைஞர் மன்றம், நல்லூர் சமூக அபிவிருத்தி மன்ற உப அமைப்பு, சுதுமலை அம்மன் ஆலயம் மற்றும் பொது மக்கள் ஆகியவையே இந்த உதவித் தொயைகையை வழங்கியுள்ளது. (204)

# கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் தொழில் முயற்சியாளரிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்கள், கைத்தொழில் துறையிலுள்ள சுயதொழிலாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள், உணவு மற்றும் பானங்கள், பாதணி, தோல் மற்றும் ஒத்த உற்பத்திகள், இலகு பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில்கள் தும்பு மற்றும் நார் அடிப்படையிலான உற்பத்திகள், மரம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்திகள், அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசிக்கூழ் அடிப்படையிலான உற்பத்திகள், கனிப் பொருள்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் அடிப்படையிலான உற்பத்திகள், கட்டடம் மற்றும் கட்டடப் பொருள் அடிப்படையிலான உற்பத்திகள், தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்திகள், வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்னும் அடிப்படையின்கீழ் வகைப்படுத்தப்படும்.

சுயதொழிலாளர்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்படமாட்டா. அவை பொதுவாக மாவட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்படும்.

2009 தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்கள் பின்வரும் முதலீடு மற்றும் தொழில் உருவாக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்படும்.

சுயதொழில்த்துறை - ஐந்து லட்சம் ரூபா வரையான முதலீடு (தமது சொந்த வியாபாரத்தில் தமது குடும்ப உறுப்பினர்களை மட்டும் தொழிலுக்கமர்த்தும் தொழில் முயற்சியாளர்கள் 'சுயதொழிலாளர்' எனக் கருதப்படுகின்றனர்).

சிறிய அளவுக் கைத்தொழில்கள் - ஐந்து லட்சம் ரூபாவிலிருந்து ஐம்பது லட்சம் ரூபா வரையான முதலீடு.

நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - ஐம்பது லட்சம் ரூபாவிலிருந்து மூன்று கோடி ரூபா வரையான முதலீடு.

விண்ணப்பங்களைப் பொருத்தமான ஆவணங்களின் பிரதிகளுடன் தமது கைத்தொழிலுக்கு உரித்தான அந்தந்த கைத்தொழில் அபிவிருத்திச்சபை மாவட்ட அலுவலகத்துக்கு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் வழிபடுத்தலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச்சபை (IDB), தேசிய கண்காட்சி மற்றும் 2009 இற்கான வர்த்தகச் சந்தை நவம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இத்தேசிய கண்காட்சியில் ஜனாதிபதி விருதுகளுக்குத் தகுதிபெறும் தொழில் முயற்சியாளர்கள் மாவட்ட மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர். (201)

# நம்பிவந்தோருக்கு உதவும் நாயகன் விநாயகன்

ஞானக்கதிர்

விநாயகர் பெருமை பற்றி பேசமுடிந்த அளவிற்குத்தான் முடியும். பேசி முடியும் அளவுக்கு அவன் பெருமை அடங்காது. தம்பி முருகனுக்கு உதவியதைப் போலவே நம்பிக்கை கொண்டு தொழுவோர்க்கு தும்பிக்கையான் நிச்சயம் உதவிசெய்வான்.

ஞானக் கனி பெறுவதற்காக உலகை சுற்றி வந்தவன் முருகன். உலகமே தனது தாயும் தந்தையும் என்ற தத்துவத்தை உணர்த்தினான் முருகன். தன் பெற்றோரையே சுற்றி வந்து கனியைப் பெற்றவன் கணபதி. இந்தச் சம்பவத்தால் அன்னையும பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியவன் விநாயகன். அது மட்டுமல்ல தனது ஐந்து கரங்களில் ஒன்றில் வைத்திருக்கும் இரத்தினக் கலசத்தில் உள்ள நீராற்றான் தனது தாய் தந்தையரின் பாதங்களை பூஜித்தான் என்று புராணங்கள் கூறுகின்றது. பெற்றோரிடத்தில் பிள்ளைகள் கொண்டிருக்க வேண்டிய பக்தியை இது நமக்கு உணர்த்துகின்றது.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பது விநாயகனுக்கு மிகவும் பொருந்தும். குழந்தைக்கு மிகவும் பிடித்தது இனிப்புத்தான். விநாயகனுக்கு மிகவும் பிடித்தது இனிப்புத்தான். அதனால்தான் வாழைப்பழம், கற்கண்டு, கரும்பு, மோதகம் முதலிய இனிப்பான பண்டங்களையே நாம் அவனுக்குப் படைக்கின்றோம். அவ்வளவு ஏன்? பிள்ளையார் என்று குழந்தையின் பெயர். வேறு எந்தத் தெய்வத்தையும் பிள்ளையார் என்று அழைக்கின்றோமா? அம்பிகைக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பிள்ளையாராக விளங்கும் விநாயகப் பெருமான் கையிலே மோதகம் வைத்துள்ளார். அந்த மோதகத்தில் அருமையான பொருள் நிறைந்து கிடக்கின்றது. பருப்பு, தேங்காய்த் துருவல், சர்க்கரை ஆகிய மூன்றையும் மாவால் மறைத்துக் கொண்டிருக்கும் தின்பண்டம் மோதகம். மாவாகிய பாகம் மாயை எனப்படும். பருப்பு எனப்படும் சக்தியும், துருவல் என்கின்ற புத்தியும், சர்க்கரை என்கின்ற ஆனந்தமும் மாவாகிய மாயையால் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதனையே அவர் கையில் உள்ள மோதகம் என்கின்றோம்.

கணபதிக்கு கரங்கள் ஐந்து ஆகும். ஐந்து கரங்களும் ஐந்து தொழிலைக் குறிக்கின்றன. எனவே ஐந்தொழில் ஆற்றுபவன் விநாயகன் என்பது நமக்குத் தெளிவாகின்றது. ஆற்றல் பெற்றவன் முருகன் என்றால் அறிவைப் பெற்றவன் கணபதி. விக்கினங்களை எல்லாம் தீர்த்துவைப்பதால், விக்கினேஸ்வரன் எனப்படுபவனை நாளும் தொழுதால் எமக்கு நலன் கோடி உண்டாகும். இன்னுமொரு தத்துவத்தை விநாயகப் பெருமான் எமக்கு உணர்த்துகின்றார். விநாயகன் என்றால் தனக்கு மேல் ஒரு நாயகன் இல்லாதவன் என்று பொருள். ஆனைமுகனாக விநாயகப் பெருமானை நாம் வழிபடுகின்றோம். ஆனைமுகத்தவன் தன் ஒரு கையில் அங்குசம் தரித்திருக்கின்றார். உலகியலில் ஆனையை அடக்கும் அங்குசம் பாகன் கையிற்றான் உண்டு. அடங்குவது யானை, அடக்குவது பாகன். ஆனால், விநாயகப் பெருமான் அடங்குவதும் அடக்குவதும் தானே என்ற உண்மையை பக்தர்களுக்கு விள்க்கிக் கொண்டிருக்கிறார். எனவே விநாயக வணக்கம் மன அடக்கத்தைக் குறிக்கொண்டுள்ளது.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது வள்ளுவம்.

# செய்திச்சரம்......செய்திச்சரம்

## நயினாதீவு குறுக்கு வீதியை புனரமைக்கக் கோரிக்கை

நல்லூர், ஜூலை 10

நயினாதீவு, 3 ஆம் குறுக்குத்தெருக்கான புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது திருத்தியமைக்கப்பட்ட பகுதிகள் போக ஏனைய பகுதியையும் உடன் திருத்தியமைத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நயினாதீவு மக்களின் முக்கிய போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றாக இது விளங்குவதால் புனரமைப்புப் பணிகள் துரிதமாக்கப்பட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் கவன்ம் செலுத்த வேண்டும் எனவும் நயினாதீவு மக்கள் தெரிவிக்கிறார்கள். (203-111)

## நெல் மூடை விழுந்ததில் வயோதிபரின் எலும்பு முறிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 10

லொறி கூடாரத்தில் அடுக்கப்பட்ட நெல் மூடை சரிந்து வீழ்ந்ததில் அங்கு நின்ற வயோதிபரின் தோள்மூட்டு எலும்பு முறிந்தது.

இச்சம்பவம் சரசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.கந்தையா (வயது-68) என்பவர் எலும்பு முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (201-207)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் 11 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

கொடிகாமம் பொலிஸாரால் கடந்த வாரம் பாலாவி தெற்கைச் சேர்ந்த உழவு இயந்திர சாரதிக்கு எதிராக அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றியதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த சாரதி நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. (203-207)

## கல்வயல் கிராமம் பாவல் உற்பத்திக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

விவசாயத் திணைக்களத்தின் கிராமத்திற்கு ஒரு பயிர்த் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் பிரிவில் கல்வயல் கிராமம் பாவல் மரக்கறி உற்பத்திக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு கல்வயல் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த 20 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கையினை மேம்படுத்த தலா 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உர வகைகளும் கிருமி நாசினிகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## சுற்றாடல் தின நிகழ்வும் மரநடுகையும்

வலி.வடக்கு, ஜூலை 10

உடுவில் பிரதேச செயலக சுற்றாடல் பிரிவு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் ஒளியகம் சனசமூக நிலையத்தில் உலக சுற்றாடல் தினத்தையும் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வையும் அண்மையில் நடத்தியது.

உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் ரி.எம். வசந்தநாயகம் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு சமண்டலை, மலைவேம்பு, ஜம்புநாவல், மாதுளை, கொய்யா ஆகிய மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

ஒளியகம் சனசமூக நிலையம் முன் பள்ளி வளாகத்தில் மரங்கள் நடும் நிகழ்வும் இடம்பெற்றது. (203-86)

## வீதி விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வீதி விபத்துக்களில் சிக்கி இரு மோட்டார் சைக்கிளோட்டிகள் காயமடைந்தனர்.

வீதியின் குறுக்கே ஓடிய ஆட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் கச்சாயைச் சேர்ந்த நவரத்தினம் (வயது 52) என்பவரும் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மந்துவிலைச் சேர்ந்த ரி.செந்தூரன் (வயது 30) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (201-207)

## பலாப்பழம் பிடுங்கியவர்கள் தவறி வீழ்ந்து காயமடைந்தனர்

பலாப்பழம் பிடுங்க மரங்களில் ஏறியவர்கள் தவறி வீழ்ந்ததில் காயமடைந்தனர்.

கல்வயல் பகுதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சின்னத்துரை (வயது 84) என்பவருக்கு கால் முறிவும் நுணாவில் பகுதியைச் சேர்ந்த மோ.விதுர்சன் (வயது13) என்பவருக்கு கைமுறிவும் ஏற்பட்டன.

இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (201- 207)

## மாமரச் செய்கையாளர் கூ.சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சி பிரதேச மாமரச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற மாமரச் செய்கையாளர் கூட்டத்தில் சங்கமாக இயங்கத் தீர்மானிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## சமையறையில் தீ பற்றியது

சமையல் அடுப்பில் இருந்த தீ சமையலறைக் கூரையில் பற்றிக் கொண்டதால் சமையலறை முற்றாக எரிந்து நாசமாகின. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் கிழக்கில் பிரபா என்பவரது வீட்டில் இடம் பெற்றது.

இந்தத் தீ விபத்தில் சமையலறையில் இருந்தசமையல்பொருள்கள்உட்படஅனைத்துப் பொருள்களும் எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-131)

## கிராமிய வங்கிகளில் சேமிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூலை 10

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பணியாளர்களதும், வாடிக்கையாளர்களதும் உதவியை நாடியுள்ளது.

சேமிக்கும் பணத்தைக் கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு சங்கத்தின் வளர்ச்சிக்கும் உதவுமாறு கோரியுள்ளது.

வங்கியில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு சகல பணியாளரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-115)

## மின் இணைப்பு கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிப்பு

கரவெட்டி, ஜூலை10

வடமராட்சிப் பகுதியில் குறித்த சில இடங்களைச் சேர்ந்த மக்கள் புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பித்துள்ள போதிலும் இதுவரை இணைப்புகள் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

புதிய இணைப்புப் பெறுவதற்கு முற்பணமும் கட்டப்பட்டுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (203-70)

## மரத்தில் துள்ளிக் குதித்தவர் விழுந்து காயமடைந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை10

கிரிக்கெட் போட்டியை மரத்திலிருந்தவாறு ரசித்த இளைஞர் தன்னிலை மறந்து துள்ளிக் குதித்ததில் கீழே வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ம.ஆரோக்கியராஜ் (வயது 16) என்பவர் காயமடைந்த நிலையில் சவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (204- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

# தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

## பகுதி 1

நேரம் : 45 நிமிடம்
100 புள்ளிகள்

100


### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**கீழுள்ள சதுரத்தினுள் உள்ள எழுத்துக்களையும், இலக்கங்களையும் நன்கு அவதானித்து, 1 - 5 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**


M 4 u
U ப
ம ர
B ந உ 5
அ j 3 ன் P

1. தமிழ் மொழிக்குரிய எழுத்துக்கள் சரியாக அகராதி அமைப்பில் வைக்கப்பட்டுள்ள விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
   i) உ, ம, அ, ப, ர, ன் ii) அ, உ, ப, ம, ர, ன் iii) அ, ப, உ, ம, ர, ன் iv) ர, அ, ம, உ, ப, ன்
2. அகராதி ஒழுங்கில் உள்ள ஆங்கில எழுத்துக்களை உடைய விடையாவது,
   i) U, B, M, P ii) P, M, B, U iii) B, M, P, U iv) M, B, P, U
3. சிங்கள எழுத்துக்கள் மூன்றையும் தெரிந்து எழுதுக. ....................
4. தமிழ் எழுத்துக்களைக் கொண்டு (சிங்கள) ஆண்பிள்ளையொருவரின் பெயரை எழுதுக. ....................
5. இலக்கங்களின் கூட்டுத்தொகையின் இருமடங்கு எத்தனை? ....................

**கீழே காட்டப்பட்டுள்ள உருவங்களையும், விபரங்களையும் நன்கு அவதானித்து 6 - 9 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**



புத்தகம் வாசிப்பதற்கு விரும்புவோர் | கணக்குச் செய்வதற்கு விரும்புவோர் | சித்திரம் வரைவதற்கு விரும்புவோர்




6. புத்தகம் மாத்திரம் வாசிக்க விரும்புவோரைக் காட்டும் எழுத்தாவது,
   i) A ii) F iii) C iv) D
7. கணக்குச் செய்வதற்கும் சித்திரம் வரைவதற்கும் மாத்திரம் விரும்புவோரைக் காட்டும் எழுத்தாவது,
   i) B ii) A iii) E iv) D
8. மூன்று விடயங்களையும் செய்வதற்கு விரும்புவோரைக் காட்டும் ஆங்கில எழுத்தாவது,
   i) B ii) E iii) A iv) C
9. சித்திரம் வரைவதற்கும் புத்தகம் வாசிப்பதற்கும் மாத்திரம் விரும்புவோரைக் காட்டும் எழுத்தாவது,
   i) D ii) B iii) F iv) E
10. கஜன், நீதன், ருவணி எனும் மூவரும் ஒரே பைக்கு பூக்களைப் பறித்துப் போட்டனர். கஜன் 15 ரோசாப் பூக்களையும், நீதன் 26 மல்லிகைப் பூக்களையும், ராஜன் 23 கார்த்திகைப் பூக்களையும் பறித்ததாகக் கூறினர். பையில் கலந்திருந்த பூக்களை மூன்றாகப் பகுத்து மூவரும் எண்ணினர். அவர்கள் எண்ணிய எண்ணிக்கை வருமாறு:
    கஜனின் பூக்கள் - 6 ரோசாப் பூக்கள் 10 கார்த்திகைப் பூக்கள்
    நீதனின் பூக்கள் - 5 ரோசாப் பூக்கள் 10 மல்லிகைப் பூக்கள் 9 கார்த்திகைப் பூக்கள்
    இதற்கமைய ராஜனின் கலந்த பூக்களில் உள்ள பூக்களாவன,
    i) 5 ரோசாக்கள் 2 கார்த்திகைகள் 10 மல்லிகைகள்
    ii) 4 ரோசாக்கள் 5 கார்த்திகைகள் 8 மல்லிகைகள்
    iii) 3 ரோசாக்கள் 8 கார்த்திகைகள் 4 மல்லிகைகள்
    iv) 4 ரோசாக்கள் 4 கார்த்திகைகள் 16 மல்லிகைகள்

**கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து அதன் கீழுள்ள 11 - 15 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

மழலைகள் நாங்கள் மழலைகள்
எதிலும் பேதம்காணாப் பறவைகள்
நட்சத்திரப் பூவெடுத்து
வானவில்லில் நாரெடுத்து
மாலை தொடுப்போம்
அதைச் சூடிமகிழ்வோம்.
வெண்ணிலவால் மெத்தையிட்ட
ஊஞ்சல் அமைப்போம்




அதிலேறி குதூகலமாய்
ஆடி மகிழ்வோம்.
மலையேறி விண்ணைத்தொட்டு
பாடி மகிழ்வோம்.
சூரியப் பூவைக்கண்டு இரசித்து
துள்ளி மகிழ்வோம்.



11. இந்தக் கவிதைக்கு தலைப்பிடுக. ....................
12. ஏற்றத் தாழ்வு எமக்குத் தெரியாது' எனும் கருத்துப் பொதிந்த வரியை எழுதுக. ....................
13. கவிதையில் குறிப்பிடப்படும் மலர்கள் எவை? ....................
14. வானவில் எனும் சொல்லுக்குரிய ஆங்கிலச் சொல்லைத் தருக. ....................
15. கீழ்வரும் சொற்களுக்குப் பொருத்தமான சொற்களை கவிதையில் இருந்து தெரிந்து எழுதுக.
    i) குழந்தைகள் .................... ii) களிப்போம் ....................
    iii) பட்சி .................... iv) ஆகாயம் ....................

**16 - 18 வரையான வினாக்களில் உள்ளவற்றில் இறங்குவரிசையில் உள்ளவற்றைத்தெரிந்து அதன் கீழ்க்கீறிடுக.**

16. i) நாள், வருடம், வாரம், மாதம் ii) வருடம், மாதம், வாரம், நாள் iii) வாரம், நாள், மாதம், வருடம்
17. i) m, cm, km, mm ii) km, m, cm, mm iii) cm, mm, km, m
18. i) இளைஞன், கிழவன், சிறுவன், குழந்தை
    ii) சிறுவன், இளைஞன், கிழவன், குழந்தை
    iii) கிழவன், இளைஞன், சிறுவன், குழந்தை
19. குரக்கன்' எனும் சொல் இரகசிய குறியீடு மூலம் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய 'அரக்கன்' எனும் சொல்லுக்குரிய இரகசியக் குறியீட்டைக் கொண்ட விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.



i) ii) iii)

**கீழ்வரும் சொற்களின் உதவியுடன் 20 - 25 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

வாழை, பன்றி, கறுவா, ஒல், எலி, கோ, கொய்யா, இஞ்சி, கடல் மாங்காய், நா, நுளம்பு, பலா, அரச மரம்,வேம்பு, வைக்கோல், மா

20. நோய் ஏற்படுத்தும் உயிரினங்கள் மூன்று (மேலுள்ளவற்றிலிருந்து)
    i) .................... ii) .................... iii) ....................
21. மருத்துவ குணமுடைய மூன்று மரங்கள் (மேலுள்ளவற்றிலிருந்து)
    i) .................... ii) .................... iii) ....................
22. கடைசி எழுத்து 'இ' உச்சரிப்புடன் கூடிய மூன்று எழுத்துக்கள் (மேலுள்ளவற்றிலிருந்து)
    i) .................... ii) .................... iii) ....................
23. சொல்லாக உள்ள எழுத்துக்கள் மூன்று. ((ஓரெழுத்து ஒருமொழி)) (மேலுள்ளவற்றிலிருந்து)
    i) .................... ii) .................... iii) ....................
24. முக்கனிகளும் எவை? (மேலுள்ளவற்றிலிருந்து)
    i) .................... ii) .................... iii) ....................
25. முறையே பெரிய, நாக்கு, அரசன் எனும் பொருள் கொள்ளமுடியுமான மூன்று எழுத்துக்களாவன,
    i) .................... ii) .................... iii) ....................

**26 - 28 வரையான வினாக்களுக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை, அடைப்புகளிலிருந்து தெரிந்து கீறிடுக,**

26. நேற்றுப் பெய்த அடைமழையால் ஆறு ....................
    (வழிந்தோடின, வழிந்தோடியது)
27. எனது அக்கா ஏழைச் சிறுவர்களுக்கு பல உதவிகள் ....................
    (செய்தார், செய்வார்கள்)
28. மரங்களில் இருந்த குரங்குகள் அங்குமிங்கும் பாயத் ....................
    (தொடங்கியது, தொடங்கின)

**சுருக்கக் குறியீடுகள் குறிப்பிடுவன யாவை என கீறிட்ட இடங்களில் எழுதுக.**

29. i) ம.ம.வி .................... ii) இ.ஒ.கூ ....................
    iii)கி.பி. ....................


**பொருத்தமான விடைகளைத் தெரிந்து அவற்றின் கீழ்க் கீறிடுக.**

30. தென் மாகாணத்திற்குரிய மாவட்டங்களாவன,
    i) மாத்தறை, களுத்துறை, காலி
    ii) காலி, களுத்துறை, கம்பஹா
    iii) அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை
31. சமாதானத்தை வெளிப்படுத்தும் பறவையும் நிறமும்,
    i) கழுகு, கறுப்பு ii) மயில், பச்சை iii) புறா, வெள்ளை
32. ஊர்வன இனத்தைச் சார்ந்தவை,
    i) முள்ளம்பன்றி, அன்னம், பாம்பு
    ii) நாகம், புடையன், மலைப்பாம்பு
    iii) மலைப் பாம்பு, வாத்து, கிளி
33. தோற்கருவிகள் மூன்றின் பெயர்களாவன,
    i) றபான், மத்தளம், மேளம்
    ii) றபான், வீணை, புல்லாங்குழல்
    iii) றபான், நாதஸ்வரம், சங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புடனும் மேலதிக சேர்க்கையுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.

34. நவீன விளையாட்டுக்கள் மூன்று,
i) கிரிக்கட், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம்
ii) கிட்டிப்புல், சடுகுடு, ஒலிம்பிக்
iii) ஒலிம்பிக், கிரிக்கட், வாரோட்டம்




35. மேலுள்ள உருக்களின் உயரங்கள் ஏறுவரிசையில்,
i) ACBDE ii) BDCEA iii) EABCD iv) EDBAC

**கீழ்வரும் படத்தை நன்கு அவதானித்து எழுத்துப் பிழைகளற்ற ஐந்து ஆங்கிலச்சொற்கள் எழுதுக.**




36. ..............................
37. ..............................
38. ..............................
39. ..............................
40. ..............................

இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 04 இன் பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

**முன்னோடிப்பரீட்சை 3-ii வினாத்தாளுக்கான விடைக்குறிப்புக்கள்**

1. பசுந்தரை(க்கு) 2. சந்திரன் (அந்திப்பொழுதில்) சுடர் விட்டதனால். 3. பூக்களுக்கு 4. வாருங்கள, தாருங்கள் 5. வானம், கிண்ணம், பால், தேன் 6. மதி, நிலா 7. மாலை நேரம், அந்திப்பொழுது 8. அ) SKY ஆ) STARS இ) GOLD 9. ரூபா 240 10. ரூபா 144 11. ரூபா 384 12. கடை 13. சென்றான். 14. கடைகளுக்கு 15. பாண் 16. வந்தான். 17. இப்பந்தியில் அடைமொழி இடம்பெறவில்லை. (அதாவது எழுவாய், செயப்படுபொருள், பயனிலைச் சொற்களை விசேடித்த சொற்கள் இடம்பெறவில்லை.) 18. Morning 19. அ) வளியின் அவசியம் பற்றி அறிந்துகொள்ள. 20. அ) எரிதலுக்கு வளி அவசியம் என்பது. 21. வளியின் உதவியுடன் இசைக்கக்கூடிய (துளைக்) கருவியொன்று புல்லாங்குழல். (நாதஸ்வரம்; மலோடிக்கா; சங்கு போன்றனவும் துளைக் கருவிகளே!) 22. எல்லே, ஹொக்கி, க்ரிக்கட் 23. நீலம், மஞ்சள், சிவப்பு 24. அ) ஒற்றுமையே பலம் தரும். ஆ) எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும். இ) இளமையில் கற்பதன் சிறப்பு. 25. அ) விளிம்புகள் : 12 ஆ) உச்சிகள் : 08 இ) சதுரவடிவ முகங்கள் : 06 26. அ) MOON ஆ) SEA இ) MONTH ஈ) KANDY 27. வலது பக்க மேல் மூலை: அனுப்புநர் முகவரி, திகதி - இடது பக்க முதல் வரி: விளிப்பு - விளிப்பின் கீழ்: செய்தி. - வலது பக்க கீழ் மூலை: கையொப்பம் 28. 1) சரி 2) பிழை (சரியான விடை: 1948.02.04) 3) பிழை (சரியான விடை: ஆனந்த சமரகோன். தமிழில் மொழிபெயர்த்தவர்: மு. நல்லதம்பி.) 4) பிழை (சரியான விடை: தோமஸ் அல்வா எடிசன். சந்திரனில் முதன்முதல் காலடி வைத்தவர்: நீல் ஆம்ஸ்ட்ரோங்) 5) சரி. 29. மூன்று வயது. 30. 22.50 31. 594 ml 32. பச்சை

எழுவாய், பயனிலை முறையாக அமையும் நான்கு சொற்கள் கொண்ட வாக்கியங்கள் எழுதி ஆசிரியருக்குக் காட்டுக.

**நன்றி: ஸத்தர, லக்விந்து, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ.**

*தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -*
## இஸ்மாயில் எம். பைரூஸ்
**(கொழும்பு)**

**அன்பு மாணவர்களே!**
இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் மந்துவில் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கினர்.
பாடசாலை அதிபர் சி.பவனேந்திரனிடம் கற்றல் உபகரணத் தொகுதியினை கழகச் செயலாளர் லயன் ச.செந்தூரன் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (207)



பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் 'நிக்கொட்' நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்திறப்பு விழாவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான இயக்குநர் றிச்சாட் வோக்ஸ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் திருமதி சந்தீபனி கொடித்துவக்கு, 'நிக்கொட்' நிறுவன திட்டப்பணிப்பாளர் த. இலங்காநேசன் ஆகியோர் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: கர்ணன்)



யாழ்.சன்மார்க்க ம.வியின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் பி.நாகரத்தினத்துக்கு 'பொன்மனச் செம்மல்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வே[illegible] வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (203)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயப் பரிசளிப்பு விழா நிகழ்வில் பாடசாலையின் அதிபர் செல்வி நா.ஜெயராணி, பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் க.நல்லையா, பாடசாலையின் உப அதிபர் திருமதி க.விமலாதேவி, பாடசாலை அபிவிருத்திச் சங்க உப தலைவர் திருமதி க.மங்களேஸ்வரி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும்,
[illegible] விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானைக் கோட்டக் கல்விப் [illegible]துரை எங்கரசு மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinity College And University
(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

யாழ் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களது நன்மை கருதி யாழ்ப்பாணத்திலும் எமது பட்டப்படிப்புக்கள் அனைத்தையும் தற்போது ஆரம்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**Bachelors Degree :-**
- Bachelor of ICT (B.ICT) (Three Years + ICT Training)
- Bachelor of Business IT (B.B.IT) (Two Years +Training)
- Bachelor of Business Management (BBM) (Two Years +Training)
- Bachelor of Commerce (B.Com) (Two Years +Training)
- Bachelor of International Business (B.IB) (Two Years +Training)
- Bachelor of Computer Science - B.Sc (Hons) (Two Years +ICT Training)

**Masters Degree :-**
- Master of ICT (MICT) (1 ½ Years + Project Training)
- Master of Science (IT) (M.Sc in IT) (1 ½ Years + Project Training)
- Master of Commerce (M.Com) (1 ½ Years + Project Training)

அனுமதி விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எமது யாழ் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.



O/L அல்லது A/L பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

எமது பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரமுள்ள இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் படிப்பை தொடரமுடியும்

வகுப்புக்கள் யாவும் வார மற்றும் வார இறுதிநாட்களில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் முதல் பிரிவு ஆரம்பம் 14/07/09

✓ அனைத்து வருடப் பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
✓ யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே எமது பட்டப் படிப்பை நிறைவு செய்தபின்னர் UKயில் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப் பின்படிப்பை (M.Sc,MBA) தொடர முடியும் இதற்கான VISA + PART TIME JOB ஏற்பாடுகள் யாவும் எமது பல்கலைக்கழக நிர்வாகத்தால் செய்து தரப்படும்.

**Trinity University Affiliations...**
- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Kit 128. Recognized by UNESCO
- Member of the United Interdenominational Church



Please Contact Our Degree Course Advisor :-
Rev.Fr.A.B.Vincent Omi
Mobile:- 077 - 9237630

மானிப்பாயில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்

UNI
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
T.P No :- 060 - 221 - 6433 / 0777 - 110862

யாழ்ப்பாணத்தில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்:-

CATWAS.COM
Computer Academy
#26,Somasundram Avenue, Chundikuli,Jaffna.
T.P No :- 021 - 222 - 3805


# வலிகாமம் வலய பாடசாலைகளிடையேயான ஆங்கில தினப் போட்டியின் மேலும் சில முடிவுகள்

வலி.வடக்கு,ஜூலை10

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் சொல்வதெழுதுதல், பார்த்தெழுதுதல் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**சொல்வதெழுதுதல்**

*தரம் 6:* யே.சஜானா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), த.தேவஅமிர்தா (உடுவில் மகளிர் கல்லூரி), ச.அனோஜா (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி).

*தரம் 7:* கொ.வி.அனெற்றொயிலின் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), லோ.விதுஷா (உடுவில் மகளிர் கல்லூரி), பி.ரிஷிகாந்தி ( வட்டு இந்துக் கல்லூரி), பா.மச்சாயினி ( உடுவில் மகளிர் கல்லூரி),

*தரம் 8:* த.றிசாயா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.மனோஜ் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), க.தனுசயா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செ.கிருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி),

*தரம் 9:* ஜெ.மடோனாறோஜினி (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), தே.காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), பி.வினோபா (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை),

*தரம் 10:* ப.சதுர்வேதன் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), கி.கார்த்திகா (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), க.தேவலட்சனா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை),

*தரம் 11:* (மூன்றும் முதலிடங்கள்)
சி.ரமணன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), கு.உஷாமினி (உடுவில் மகளிர் கல்லூரி), செ.துவாரகன் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

*தரம் 12:* செ.லாவண்யா (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), ல.பிறேமிலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.அனித்தா (உடுவில் மகளிர் கல்லூரி).

*தரம் 13:* இ.விதுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), செ.செல்வவீனா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), ச. சுஜனி (உடுவில் மகளிர் கல்லூரி).

**பார்த்து எழுதுதல்**

*தரம் 3:* த.சங்கவி (மல்லாகம் டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்), அ.மயூரி (வட்டு, யாழ்ப்பாணக் கல்லூரி), யோ.ச.சஞ்சயன்(வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), வி.விசாலின் ( உடுவில் மகளிர் கல்லூரி)

*தரம் 4:* இ.ஜே.மருதநாயகம் (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), இ.சைலஜா (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), கு.ஆரணி (உடுவில் மகளிர் கல்லூரி),

*தரம் 5:* லோ.ஸ்ரீகர்சன் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), ஞா.துசாந்தினி (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), சே.அபிநயா (வட்டு.யாழ்ப்பா ணக் கல்லூரி),

*தரம் 6:* கே.தாமி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ஞா.யசோதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), மா. சைலஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

*தரம் 7:* சி.சதீஸ்கா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), த.ஜீவனா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), க.மாதங்கி (உடுவில் மகளிர் கல்லூரி).

*தரம் 8:* அ. தாரணி (மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), சி. வைஸ்ணவி (உடுவில் மகளிர் கல்லூரி), பு. இலக்கியா.(உடுவில் மகளிர் கல்லூரி),

*தரம் 9:* ம.மதுசா (இணுவில் இந்துக் கல்லூரி), ச.சொரூபிகா (வட்டு.மத்திய கல்லூரி), வி.துவாரகா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

*தரம் 10:* நே.சோபனா ( மானிப்பாய் மகளிர் கல்லூரி), ம.தர்சிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஜெ.டிஸ்னா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்).

*தரம் 11:* ப.வானதி ( மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஆ.தயாளினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ப.லக்சி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி),

*தரம் 12:* றொ.தே.சில்வியா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இ.தேனுஜா (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி), சு. தர்சிகா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

*தரம் 13:* சே.பிரதீபா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி. [illegible] (உடுவில் மகளிர் கல்லூரி), [illegible] (இணுவில் மத்திய கல்லூரி).

(203-86)

# அனுமதியின்றி மாடுகளைக் கொண்டுசென்ற இருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை10

அனுமதிப்பத்திரமின்றி மாடுகளைக் கடத்த முயன்ற இருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாடுகளைக் கடத்திச் சென்றவேளையில் நாவற்குழி சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரும் குற்றத்தினை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(203-207)

## நினைவு அகலா நினைவுகளில் ஆண்டு ஒன்பது

மண்ணுக்கு 16 . 10 . 1936



விண்ணுக்கு 20 . 06 . 2000

**அமரர் கந்தையா சண்முகரட்ணம்**
**(பிரதம இலிகிதர், யாழ்.தொழில் திணைக்களம்)**
திதி: திருதியை (10.07.2009)

காலன் உம்மைக் கவர்ந்து சென்று கடுகதியில்
ஆண்டுகள் ஒன்பது ஆனதுவோ
காலம் எல்லாம் சேர்ந்து இருக்க நினைத்திருக்க
துணை தவிக்கவிட்டு போனது
ஏன்தான் புரியவில்லையோ
பாசமுடன் நீர் வளர்த்த மனைவி, பிள்ளைகள்
இங்கிருக்க நீங்கள் மட்டும்
எம்மை விட்டு வெகு தூரத்தில்....
ஆனாலும் எம் மனதில் அழிவதில்லை உம் நினைவு
ஆண்டுகள் ஒன்பது என்ன ஆயிரம் ஆனாலும்
நீங்காது எம்மனதில் உங்கள் நினைவு.

29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

(86844)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 ✱ 04 ✱ 1933



மறைவு 03 ✱ 07 ✱ 2007

**திருமதி அப்புத்துரை நேசம்மா**
திதி: திருதியை (10.07.2009)

அன்பின் இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் நிறைகுடமாய் எம் எல்லோரையும் வாழவைத்த
எம் குலவிளக்கே! இரண்டென்ன இரண்டாயிரம்
ஆண்டுகள் சென்றாலும் எம் உள்ளக் கோயிலில்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(86861)

## 18ஆம் ஆண்டில் நினைவு கூருகிறோம்



அமரர்
**வேலாயுதபிள்ளை செல்வரட்ணம்**
(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

மலர்வு 25✱02✱1935
உதிர்வு 30✱06✱1991

திதி: 10.07.2009

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் பதினெட்டு போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

புகையிரத நிலைய பக்கம்,
எழுதுமட்டுவாழ்.
த.முகவரி: பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

(86873)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து வயதில் மேதையாகப் பிரகாசித்து ஐம்பது வயதில் உலகை நீத்தவர்

## 'பொப்' இசை மேதை ஜக்ஸன்; அவர் வாழ்வின் சில துளிகள்



பொப் எனும் மாயாஜால வித்தை இசையால் உலகம் முழுவதும் இலட்சக் கணக்கான ரசிகர்களைத் தன்வசம் இழுத்து வைத்திருந்த மைக்கல் ஜக்ஸன் கடந்த ஜூன் 25 ஆம் திகதி 50 வயதில் திடீர் மாரடைப்பினால் காலமானார். நேற்று முன்தினம் 8ஆம் திகதி அவரது இறுதிச் சடங்குகள் அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தேறின.

லண்டனில் தனது இறுதியான நிகழ்ச்சியொன்றை நடத்தவிருப்பதாக அறிவித்து அதற்காக முழுமூச்சில் பயிற்சியில் இறங்கியிருந்த வேளையில் ஜக்ஸன் காலமானார்.

''இது தான் அது, இது தான் அந்த இறுதித் திரைஅழைப்பு'' என்று தமது நிகழ்ச்சி பற்றி ஜக்ஸன் லண்டனில் அறிவித்திருந்தார். தமது வாழ்வின் இறுதிக்கட்டம் நெருங்கி இருந்தமையைத் தான் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தாரோ என்று வியக்கிறார்கள் ரசிகர்கள்.

### ஐந்து வயதில் நடனமேதை

ஜக்ஸனுக்கு ஐந்து வயதாய் இருந்த பொழுது- ஓர் உண்மையை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அவரைப் போன்று வேறு எவருமே மேடையில் நளினமாக- சுழன்று- நகர்ந்து நடனமாடியதில்லை என்பது வரலாறாகும்.

1982 ஆம் ஆண்டு பொப்பிசைத்துறையில் புரட்சிகரமன மாற்றத்தை ஏற்படுத்தினார் ஜக்ஸன். மேடை நடனத்தில் உடல் அசைவுகள் மூலமாக உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார்.

### பிரமிப்பு அளிக்கும் நகர்வுகள்

தொலைக்காட்சியாக இருக்கட்டும் மேடை நிகழ்ச்சியாக இருக்கட்டும் ஜக்ஸனின் நகர்வுகள் பிசகற்றவையாகவே பிரமிக்கத் தக்கவையாகவே இருந்துள்ளன. சந்திரமேடை என்ற நிகழ்ச்சி அதில் ஒன்றாகும். காற்றில் மிதப்பவர் போல் அதில் அவர் நடனமாடினர்.

அவர் பல்துறைக் கலைஞராக, கலைத்துறை விற்பன்னராக இருந்துள்ளார். பாடகர், பாடலாசிரியர், இசைத்தட்டு உருவாக்குபவர், நிகழ்ச்சி அமைப்பாளர், நடனம் ஆடுபவர், நடன பயிற்றுவிப்பாளர், நடிகர், நூல் ஆசிரியர், தொழில் அதிபர், நிதி வழங்குநர் என்று அவரது செயற்பாடுகள் விரிந்து பரந்து கிடந்தன.

மைக்கல் ஜக்ஸன் மிக அரிதான ஒரு சரும நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். இதனை மறைக்க பெரிதும் முயன்றிருக்கிறார். அந்தவகையில் பல்வேறு மருந்துகளைப் பயன்படுத்தியும் சத்திர சிகிச்சைகளுக்கு உள்ளாகியுமுள்ளார்.

தனது ஆரோக்கியக் குறைபாடுகளால் ரசிகர்களை ஏமாற்றிவிட அவர் ஒரு போதும் முயன்றதில்லை.

சிறுவர்கள் மீது அளப்பரிய அன்பைச் செலுத்திய ஜக்ஸன், தான் இழந்துவிட்ட குழந்தைப் பருவத்துக்காக கழிவிரக்கம் கொண்டு இழப்பீடு செய்ய முயல்வதாகக் கூறியிருக்கிறார்.

### பலவீனங்களும் பிரச்சினைகளும்

ஜக்ஸன் பொப்பிசைத்துறையில் பெரும் மேதையாக விளங்கிய போதிலும் அவருக்கும் பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் இருந்துள்ளன.

1994 ஆம் ஆண்டு இன்னொரு பொப்பிசை மன்னரான எல்விஸ் பெர்ஸிலின் மகள் லிஸா மேரி பேர்ஸிலியைத் திருமணம் முடித்தார். இரண்டு வருடங்கள் கூட நீடிக்காமல் திருமணம் முறிந்து போயிற்று. டெபிரோவ் என்பவரை 1996 இல் மணமுடித்தார். அவர் மூலம் பிரின்ஸ் மைக்கல் என்ற மகனையும் பெரிஸ் கெதரின் மைக்கல் என்ற மகளையும் பெற்றார். 1999 இல் மணமுறிவு ஏற்பட்டது. குழந்தைகளைப் பரிசாக வைத்துக்கொள்ளும் படி ரோவ் அறிவித்தார்.

அவருடன் இக் குழந்தைகள் பொது இடங்களுக்கு வரும்போது முகமூடி அணிந்து அல்லது முக்காடு இட்டு இருப்பார்கள். பாதுகாப்புக்காக இப்படி செய்யப் படுவதாக அவர்கூறிக்கொண்டார். ஆனால், அது ஆரம்பத்திலிருந்தே தமது ஏற்பாடு என்று கூறினார் ரோவ்.

### குரங்கு நண்பன்

நெவார்லாந்து என்ற இடத்தில் ஜக்ஸனுக்குரிய தோட்டத்தில் சிம்பன்ஸி குரங்கொன்றை வளர்த்து வந்தார். அதனைச் செல்லப் பிராணி போல் அல்லாமல் ஒரு நண்பனைப் போலவே நடத்தினர் 200 2 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஜக்ஸனுக்கு இன்னொரு மகன்- பிரின்ஸ்- II பிறந்தார். ஆனால், தாயாரின் பெயர் அறிவிக்கப் படவில்லை. அதே ஆண்டு பிற்பகுதியில் பேர்லினில் அட்லொன் ஹோட்டலில் தங்கியிருந்தபோது ஜக்ஸன் சர்ச்சையொன்றுக்குள்ளானார். ஹோட்டலின் உயர் மாடியில் யன்னல் ஒன்றின் வழியாக குழந்தையை வெளியே தூக்கி பிடித்து விளையாட்டுக் காட்டினார் இது ரசிகர் மத்தியிலும் சர்ச்சையைக் கிளப்பியது.

ஹீல் த வேர்ல்ட் (Heal the world) என்ற பொதுநல நிறுவனம் 1992 இல் ஜக்ஸனால் ஆரம்பிக்கப்பட்டது.

பல பெண்களுடன் ஜக்ஸனுக்கு தொடர்புகள்இருந்ததாகவும் அதனால் பல குழந்கைளுக்கு அவர் தந்தையான தாகவும் வதந்திகள் இருந்ததுண்டு.

### இசைத்துறைச் சாதனைகள்

1978 ஆம் ஆண்டு டயானா றோஸ் என்பவருடன் சேர்ந்து த விஸ் (The Wiz) என்ற படத்தில் நடித்தார். அக்காலத்தில் தான் குயின்ஸி ஜோன்ஸ் என்ற இசை அமைப்பாளரைச் சந்தித்தார். அவர் ஜக்ஸனின் மிகப் பிரபல்யமான மூன்று தனி ஆவர்த்தன அல்பங்களைத் தயாரித்து உதவினார்.

நிலவில் நடைப் பயணம் என்ற நிகழ்ச்சியை முதற் தடவையாக 1983 இல் பகிரங்கமாக நிகழ்த்திக் காட்டினார். தொலைக்காட்சி ரசிகர்களைத் திகில் கொள்ளச் செய்தார். 1984 ஜனவரியில் அமெரிக்க இசை விருதுகள் 9 இற்கு அவர் பெயர் குறிக்கப்பட்டிருந்தது. அவைகளில் 8 விருதுகளை வென்று சாதனை படைத்தார். இவ்வாறான பல விருதுகளை வென்று சாதனை படைத்தவர் அவர்.

22 அமெரிக்க இசை விருதுகளையும் 40 மில்லி போர்ட் விருதுகளையும் வென்றார்.

அமெரிக்க அதிபர் ரொனால்ட் - றீகன் 1984 நவம்பரில் வெள்ளை மாளிகையில் நிகழ்ச்சியொன்றில் ஜக்ஸனைக் கௌரவித்தார். ஜனாதிபதியின் சிறப்புச் சாதனை விருது அவருக்கு வழங்கப்பட்டது. பல்வேறு சாதனை விருதுகளை வென்றுள்ள ஜக்ஸன் 13 கின்னஸ் சாதனை விருதுகளைப் பெற்றுள்ளார். ✱

-ரம்யன்-

# குடாநாட்டில் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

குடாநாட்டில் அனைத்துப் பொருள்களுக்குமான விலைகளைக் கட்டுப்படுத்தி, நியாய விலையில் பொதுமக்கள் தமக்குரிய அத்தியாவசிய மற்றும் ஏனைய பொருள்களை கொள்வனவு செய்யக் கூடிய வகையிலான நிலையை எற்படுத்தும் நோக்கில் துரித முயற்சிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதன் பிரகாரம் ஏ-9 தரைப்பாதையூடாக பாரவூர்திகளின் மூலம் பொருள்களைக் கொண்டு வருவதில் ஓர் ஒழுங்கமைப்பினை உருவாக்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதே நேரம் கப்பலில் கொண்டு வரக் கூடிய பொருள்களையும் பாரவூர்திகளில் கொண்டு வரக்கூடிய பொருள்களையும் இனங்கண்டு, அதற்கேற்ற வகையில் திட்டமொன்றை வகுப்பதற்கும் அதிகளவில் பாரவூர்திகளை ஈடுபடுத்துவதற்கும், பாரவூர்திகளுக்கான நியாயமற்ற கட்டணங்களைத் தவிர்த்து நியாயமான கட்டணங்களுடன் பொருள்களைத் தருவிப்பதற்றும், யாழ். பாரவூர்திகள் உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களதும், யாழ்.வர்த்தக சங்கத்தினரதும் பாரவூர்திகளை மேற்படி பணியில் ஈடுப டுத்துவதற்கும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.


இதனடிப்படையில் இம்மாத இறுதிக்குள் மேற்படி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப் பட்ட நிலையில் யாழ்.மக்களுக்கு நியாயமான விலைகளில் அனைத்துப் பொருள்களையும் கொள்வனவு செய்ய இயலுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்-என்றுள்ளது. (203)

# சண்டிலிப்பாய் கோட்டத்தில் சிறுவர் அரங்கப் போட்டி

சித்தங்கேணி, ஜூலை 10

சண்டிலிப்பாய் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் அரங்க நாடகப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், ஆனைக் கோட்டை றோ.க.த.பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்று வலயமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி சண்முகசுந்தரம் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டிகளில் குடும்ப பாட[illegible] போட்டியில் தெரிவு செய்யப்பட்ட [illegible] பாடசாலைகள் கோட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (204-112)



நயினை நாகபூசணி அம்பாள் ஆலய 12 ஆம் திருவிழாவின் போது விநாயகர், முருகன் வள்ளி தெய்வானை சமேதராக அம்பாள் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)



ஊரெழு மேற்கு, சக்திபுரம் காளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வின்போது பிரதான கும்பங்கள் வீதியுலா வருவதையும் கலச அபிஷேகம் இடம் பெறுவதையும் படங்களில் காணலாம். (72)



நவாலி செல்.பீற்றர்ஸ் ஆலயத்தில் மடுமாதா திளத்தை முன்னிட்டு இடம் பெற்ற திருச்சொருப பவனியின்போது எடுக்கப்பட்ட படம். (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, மின்சக்தி பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் நேற்று யாழ்.செயலகத்தில் யாழ்.வணிகர் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன, மின்சக்தி பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதை ஐந்தாவது படத்தில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

கைதடி ஸ்ரீ பருவத வர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

நாவற்குழி சித்திரவேலாயுதர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (204)

* * *

குருநகர்,ஜூலை 10

ஊர்காவற்றுறை கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தினமும் மால்லை 4.30 மணிக்கு பங்குத்தந்தை வணபிதா ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகளார் தலைமையில் நடைபெற்று வருகிறது. (51)


**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின்**
**கல்லூரிதின விழா**

எமது கல்லூரியின் கல்லூரி தின விழா 13.07.2009 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியில் நடைபெறுவுள்ளது. இவ்விழாவில் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்லூரிச்சமூகம்**
யா/புனிதஹென்றியரசர் கல்லூரி, இளவாலை. (சி/559433)

**தெய்வத்தின் திருப்பாதத்தில் ஓர் இனிய இரவு**

தேசத்தின்சமாதானத்திற்காகவும்
ஆசீர்வாதத்துக்காகவும் பிரார்த்தனை ஆராதனை நிகழ்வு
நடைபெற இருப்பதால் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
இடம்: பரிசுத்த திருத்துவ திருச்சபை
*ரயில் நிலைய வீதி, யாழ்ப்பாணம்*
காலம்: இன்று (10.07.2009) வெள்ளிக்கிழமை
நேரம்: இரவு 9.00 மணி முதல் அதிகாலை 5 மணி வரை
**அனுமதி இலவசம்.**
(86891) திருச்சபை நிர்வாகம்.

# POST OF MANAGER

Uthayan News Paper requires a Manager with the following capabilities.
Retired Employees/Executives of Government Departments, state Corporations, reputed private Companies may also apply.

- Fluency in English Language.
- Handling correspondence independently.
- Ability to handle General Administration.
- Computer literacy is an added qualification.
- Knowledge of Sinhala Language is advantageous.
- Salary negotiable.

Please apply before 20.07.2009 with copies of testimonials to.(Please give your contact number in your application)

**The General Manager,**
**New Uthayan Publication (Pvt) Ltd,**
**361, Kasthuriyar Road,**
**Jaffna.**

**விற்பனைக்கு**

உரும்பிராய் பலாலி றோட்டில், கறபகப் பிள்ளையார் கோயிலுக்கும் உரும்பிராய் சந்திக்குமிடையில் 50ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 2½ பரப்புக்காணி கிணற்றுடன் கூடிய கல்வீடு விற்பனைக் குண்டு. விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
*337 1/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.*
T.P: 0777551431 (சி/559435)

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

வேம்படி வீதியில் நீலநிறமுடைய பாக்கில் 15 திறப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: கு.இராசலிங்கம் (சக்தி)
இல.16, சந்நமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P: 021 222 4016

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகலவிதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
*இல.06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி*
K.K.S.றோட். T.P.: 021 222 8680

**கடை வாடகைக்கு**

யாழ்.நகர மத்தியில் (பஸ் நிலைய முன்பாக) விசாலமான கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 2844227 (86867)

**மருந்தாளர் தேவை**

புன்னாலைக் கட்டுவன் சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பார்மசிக்கு மருந்தாளர் தேவை. அத்துடன் மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண் பிள்ளையும் தேவை.
தொடர்பு: சண்முகா மெடிக்கல்,
*K.K.S.வீதி, சுன்னாகம்.*
*தொ.பே.: 0712 146445* (86877)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

உருவாய் மண்ணில் 13 . 09 . 1945



அருவாய் விண்ணில் 11 . 08 . 2006

**அமரர் இராசரத்தினம் பாலச்சந்திரன் B.A. (Cey)**
(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் துயரம்
முழுமதியாய் நீ இருக்க
அதன் நிலவில் நாம் வாழ்ந்தோம்
ஆணிவேராய் நீ இருக்க

அதன் செழிப்பில் நாம் வளர்ந்தோம்
உள்ளம் என்னும் கோயிலிலே
உறைந்திட்ட உன் நினைவால்
தங்கும் உன் நினைவாலே
தரணியிலே வாழ்கின்றோம்.

செட்டித்தெரு,
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
குடும்பத்தினர். (86888)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 22 * 07 * 1930



ஆண்டவன் அடியில் 10 * 07 * 2006

**அமரர் சுப்பிரமணியம் சிங்காரவேலு J.P.**
(Hospital Secretary)
புலோலி - பருத்தித்துறை

கண் விழித்த நாள் முதலாய் பாசத்தின் உருவாய்
வலம் வந்த அப்பாவே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்த மாயமென்ன!
எம் வாழ்வில் சூரியனாய் ஒளி வீசி நின்றவரே - உங்கள் பிரிவால்
இன்று நாம் இருட்டில் வழிதேடி தவிக்கின்றோம்
கல்மனம் கொண்டகாலன் அவன்
பறித்துக் கொண்டான் உங்கள் உயிரை
கதறித் துடிக்குதம்மா எம் உயிர்கள்
காலங்கள் பலகோடி உருண்டாலும் மறந்திடாது உம் நினைவு
உங்கள் அன்பு நிழல் என்றும் துணைவரும் எம்முடன்...

போற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
*உங்கள் நினைவுகளுடன் வாழும்:*
குடும்பத்தினர். (86892)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளில்லா அமெ. விமானங்களின் தாக்குதல்கள்: வட - மேற்கு பாகிஸ்தானில் 50 தீவிரவாதிள் பலி

இஸ்லாமாபாத், ஜூலை 10

வட-மேற்கு பாகிஸ்தானில் ஆளில்லா அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட இரு தாக்குதல்களில், 50 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். பெருந்தொகையானோர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன என உள்ளூர் அதிகாரிகள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

தென்வசீரிஸ்தான் வனாந்தரப் பிரதேசத்திலுள்ள தலிபான் தீவிரவாதிகளின் பாரிய முகாம் மீது ஆளில்லா அமெரிக்க விமானங்கள் முதல் தாக்குதல்களை நடத்தின. இதில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். முகாம் தரைமட்டமானது. இப்பிராந்தியம் ஆப்கான் எல்லைக்கருகில் அமைந்துள்ளது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

கர்வான் மன்ஷா என்னுமிடத்தில் இப்பாரிய முகாம் அமைந்திருந்தது. இப்பகுதி அடர்ந்த வனாந்தரத்தைக் கொண்ட மலைப் பிராந்தியமாகும். லட்ஹா நகரிலிருந்து தென்கிழக்கே, 10 கிலோ மீற்றர் (6 மைல்) தொலைவில் இது உள்ளது என்றும் உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

முகாமை ஆறு ஏவுகணைகள் தாக்கின. இவற்றில் முகாம் முற்றும் முழுதாக நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. இரு தினங்களுக்கு முன்னர், இதற்கருகிலுள்ள மற்றுமொரு முகாமும் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது. சில மணித்தியாலங்களுக்குப் பின்னர், இதே பிராந்தியத்தில் இரண்டாவது தாக்குதல்கள் இடம்பெற்றன என்றும் அவர்கள் கூறினார்கள்.

லட்ஹா நகருக்கும் சரா ரோஹா நகருக்குமிடையே தீவிரவாதிகள் பயணித்த வாகன அணி மீது இரண்டாவது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆளில்லா அமெரிக்க விமானங்களால் ஐந்து ஏவுகணைகள் ஏவப்பட்டன. இத் தாக்குதல்களில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். கார்கள் தீக்கிரையாகிவிட்டன. அப்பகுதி நெடுஞ்சாலையில் கரிய புகை மண்டலங்கள் எழுந்தன'' என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

அனைத்து வாகனங்களும் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. மரணித்தவர்களில் பெரும்பாலானோர் தலிபான் தீவிரவாதிகளாவர். இவர்களோடு பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் தடைவிதிக்கப்பட்ட தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தோரும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் தலிபான் தீவிரவாதிகளோடு இணைந்து பயணித்தவர்களாவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த இரு பெரும் தாக்குதல்களில் மரணித்தவர்கள் அனைவரும் பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மெஹ்சூட்டின் விசுவாசிகளாவர் என பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி. நிருபர் செயித் சோய்ப் ஹஸன் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தலிபான் தலைவர் மெஹ்சூட்டே, இப்பிராந்தியத்தில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், அல்-குவைதா தீவிரவாதிகளுக்கும் புகலிடம் கொடுத்துள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் நம்புகிறார்கள். அத்துடன் அவரைக் கைது செய்ய உதவுபவருக்கு 50 லட்சம் டொலர் சன்மானம் அளிக்கப்படுமென்றும் அமெரிக்கா அறிவித்தல் விடுத்துள்ளது.

அதேவேளை, ஸ்வாட் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் படைகள் மேற்கொண்டுள்ள அதிரடி நடவடிக்கைகளில் திங்கட்கிழமை பாகிஸ்தான் தலிபான் கொமாண்டரும், கடும் போக்கு மதகுருவுமான மௌலானா பஷ்லுல்லா படுகாயமடைந்துள்ளார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.



சத்ரி நகரில் குண்டுவெடிபபுச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கருகில் குடியிருப்பாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

# ஆப்கான் பாடசாலைக்கருகில் குண்டு வெடிப்பு: 12 மாணவர்கள் உட்பட 25 பேர் மரணம்



காபூலுக்கு தெற்கே அமைந்துள்ள லோகர் மாகாணத்தில் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தை அமெரிக்க சிப்பாய்கள் பார்வையிடுகிறார்கள்.

காபூல், ஜூலை 10

ஆப்கானின் தலைநகரான காபூலுக்கு தெற்கே நேற்று வியாழக்கிழமை பாடசாலையொன்றுக்கருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிக்கி 25 பேர் பலியாயினர். இவர்களில் 12 மாணவர்களும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

காபூலின் தெற்கே அமைந்துள்ள லோகர் மாகாணத்தில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரு ட்ரக்கில் விறகுகளுக்கு அடியில் இக்குண்டு பதுக்கி வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என லோகர் பிரதம பொலிஸ் அதிபர் குலாம் முஸ்தபா ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

கைவிடப்பட்டிருந்த இந்த ட்ரக்கை காலையில் பொலிஸார் சோதனையிட முற்பட்ட சமயத்தில் விறகுகளுக்கடியிலிருந்து பயங்கர ஓசையுடன் குண்டு வெடித்துள்ளது. குண்டு வெடித்ததும் இந்த ட்ரக் புரண்டு உருண்டு இரு பாடசாலைகளுக்குமிடையே ஓடும் ஓடையொன்றுக்குள் விழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தலைநகரான காபூலில் பாரிய தாக்குதலொன்றை நடத்துவதற்கு தலிபான் தீவிரவாதிகளால் இக்குண்டு கொண்டு வரப்பட்டிருக்கலாம். பலத்த பாதுகாப்பையொட்டி, ட்ரக்கை அந்த இடத்தில் நிறுத்திவிட்டு பொலிஸார் அணுகியதும் தன்னியக்கக் கருவி மூலம் அவர்கள் குண்டை வெடிக்க வைத்திருக்கலாம்.

லோகர் பிராந்தியம் தலிபான் தீவிரவாதிகளின் பலம் பொருந்திய கோட்டையாக ஒரு காலத்தில் திகழ்ந்தது. அமெரிக்கப் படைகளும், ஆப்கான் படைகளும் கூட்டாக மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கையால் இக்கோட்டை தற்போது சரிந்துவிட்டது. அதனால் தலிபான்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள் என்றும் அவர் விளக்கினார்.

# வட ஈராக்கில் குண்டுத் தாக்குதல்கள்: 14 பேர் உயிரிழப்பு; 39 பேர் படுகாயம்

பக்தாத், ஜூலை 10

வட ஈராக்கிய நகரான மொசூலில் புதன்கிழமை இடம்பெற்ற இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில் 14 பேர் கொல்லப்பட்டனர். 33 பேர் காயமடைந்தனர். இக்குண்டுகள் அடுத்தடுத்து, சில நிமிடங்களுக்குள் வெடித்துள்ளன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

வட மொசூலிலுள்ள குடியிருப்புப் பகுதியில் முதல் கார்க்குண்டு வெடித்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஆறுபேர் படுகாயமடைந்தனர். ஷபாக்ஸ் என்னும் சிறுபான்மையினர் இப்பகுதியில் செறிந்து வாழ்கின்றனர் என பொலிஸ் அதிகாரியொருவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

இத்தாக்குதலை அடுத்து, 10 நிமிடங்களுக்குப் பின்னர், ஷியா மசூதிக்கருகில் இரண்டாவது கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 13 பேர் கொல்லப்பட்டனர். 33 பேர் படுகாயமடைந்தனர். நகரிலுள்ள ஷபாக்களின் பிறிதொரு குடியிருப்புப் பகுதியிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் இந்த மசூதி அமைந்துள்ளது. இக் கார்க்குண்டுத் தாக்குதலில் அக்கம் பக்க வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

ஈராக்கின் வட நகரான மொசூலில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள். அரபுக்கள், குர்திஷ்கள், இன்னபிற சிறுபான்மை மக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் இங்கு வசிக்கிறார்கள். அடிக்கடி இனக் கலவரங்களும், மதப் பிரிவினைவாத மோதல்களும் இங்கு இடம்பெற்றுவிடும்.

மொசூலிலுள்ள சோதனைச் சாவடியொன்றில் புதன்கிழமை, ஈராக்கிய சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டார். அன்று ஒரு கார் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிவிலியன் ஒருவர் கொல்லப்பட்டார். இதற்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை.

நைன்விக் மாகாணத்தில் காரொன்றுக்குள் இருந்த குண்டுகள் வெடித்தமையால், அக்காருக்குள்ளிருந்த இருவர் கொல்லப்பட்டனர். இவர்கள் வெடிபொருள்கள் விநியோகக் கும்பலைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பக்தாத்தில் ஷியாக்கள் செறிந்து வாழும் சதரி நகரிலுள்ள சந்தைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

# ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் அனுமதிக்கப்படவில்லை

## ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 10

''ஈரானில் அணுசக்தி மையங்களைத் தாக்கி அழிப்பதற்காக அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா அனுமதி அளிக்கவில்லை'' என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்திருக்கிறார்.

ஈரான் அணுமின் உற்பத்தி செய்வதற்காக அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளது. இதற்கு அமெரிக்கா உட்பட உலக நாடுகள் மின் உற்பத்தி என்ற பெயரில் அணு ஆயுதங்களைத் தயாரிக்க ஈரான் திட்டமிடுகிறது எனக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

ஈரான் அணுசக்திப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடேன் கூறுகையில், ''ஈரானின் அணு ஆயுத ஆசைக்குப் பதிலடியாக இஸ்ரேல் எடுக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்கா தடையாக இருக்காது எனக் கூறினார். என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இஸ்ரேல் தாமாக முடிவுசெய்து கொள்ளலாம் என்றும் ஜோ பிடேன் கூறியிருந்தார்.

இதைத் தொடர்ந்துதான் ஈரானைத் தாக்குவதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா அனுமதி கொடுக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். ஒபாமா தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த சமயம் இஸ்ரேலுக்கு ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளதா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளித்துள்ளார்.

''ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா அனுமதி கொடுக்கவில்லை. மற்ற நாடுகளின் பாதுகாப்பு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு உத்தரவுபோட முடியாது. இந்தப் பிரச்சினைக்கு அரசியல் பேச்சுகள் மூலம் தீர்வு காணும்படி கேட்டுள்ளேன். ஈரானின் அணுசக்திப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணவேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் கொள்கை ஆகும்.'' - என அவர் பதிலளித்துள்ளார்.

# மறைந்த பின்னும் ஜக்ஸன் புகழ்



லொ.ஏஞ்., ஜூலை 10

பொப் மன்னன் மைக்கல் ஜக்ஸனுக்கு பிரியாவிடை அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்த இரங்கல் நிகழ்ச்சியை தொலைக்காட்சி மூலம் அமெரிக்காவில் 31 கோடி பேர் பார்த்திருக்கின்றனர். இசை உலகை தனது மயக்கும் குரலால் கட்டி ஆண்ட மைக்கல் ஜக்ஸனின் இறுதிச்சடங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதற்கு முன்னர் அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் மாபெரும் இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இரங்கல் நிகழ்ச்சியை அமெரிக்காவில் ஏ.பி.சி., சி.டி.எஸ்., சி.என்.என். உள்ளிட்ட 19 தொலைக்காட்சிகள் நேரடியாக ஒளிபரப்பின. தொலைக்காட்சி மூலம் ஜக்ஸனின் இரங்கல் நிகழ்ச்சியை 31 கோடி பேர் நேரில் பார்த்துள்ளனர் என் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் மறைந்த பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் இரங்கல் கூட்டமே இப்படி அதிகளவிலான பார்வையாளர்களை ஈர்த்துள்ளது. டயானா மறைந்த போது 33.2 கோடி பேர் இரங்கல் நிகழ்ச்சியை பார்த்திருக்கின்றனர். அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா பதவியேற்றதை 38 கோடி பேர் தொலைக்காட்சி வழியே பார்த்துள்ளனர்.

ஜக்ஸனின் மறைவு இணையத்தள உலகிலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. ஜக்ஸன் நினைவாக இணையத்தளத்தில் நடைபெற்ற விவாதம் மற்ற தலைப்புகளையெல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# "கற்பனை செய்யமுடியாத சிறந்த தந்தை": ஜக்ஸன் இறுதிச் சடங்கில் மகள் கண்ணீர்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 10

மைக்கல் ஜக்ஸனுக்குப் பிரபலங்கள் நடத்திய இறுதி இசை அஞ்சலி கூட்டத்தில் பங்கேற்ற அவரது 11 வயது மகள் பாரீஸ் கத்தரீன், ''யாராலும் கற்பனை செய்யமுடியாத அளவுக்குச் சிறப்பான தந்தை'' என்று கதறி அழுதார்.

பொப் இசை உலகின் முடிசூடா மன்னன் மைக்கல் ஜக்ஸனின் இறுதிச் சடங்குகள் செவ்வாய்க்கிழமை இரவு (இலங்கை நேரப்படி) அமெரிக்காவில் நடந்தது. மைக்கல் ஜக்ஸனின் விருப்பப்படியே இந்த பூமியில் இதுவரை இல்லாத மாபெரும் இசை நிகழ்ச்சியாக இறுதிச் சடங்கு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த அந்த நிகழ்ச்சியில் ஏராளமான பிரபலங்கள் பங்கேற்றிருந்தனர். ஸ்டேபிள்ஸ் அரங்கில் இடம்பெற்ற அந் நிகழ்ச்சியில் மைக்கல் ஜக்ஸனின் பெற்றோர், அவருடைய 3 குழந்தைகள், தங்கை ஜெனட் ஜக்ஸன் ஆகியோர் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். மைக்கல் ஜக்ஸன் உயிருடன் இருந்த போது, அவருடைய குழந்தைகள் பொது நிகழ்ச்சிக்கு வந்ததே கிடையாது.

ஜக்ஸனுடன் எப்போதாவது வர நேரிட்டால், முகத்தை மறைத்து அல்லது வேறுவிதமாக [illegible] அழைத்து வரப்படுவர். முதன் [illegible] அவரது இறுதி அஞ்சலி இசை நிகழ்ச்சியில் மகள் பாரீஸ் கத்தரீன் (வயது 11), புதல்வர் பிரின்ஸ் மைக்கல் (வயது 12), பிரின்ஸ் மைக்கல் - 2 (வயது 7) ஆகியோர் கலந்துகொண்டனர்.



மைக்கல் ஜக்ஸனின் 'வி.ஆர்.தி.வேர்ல்ட்' என்ற இசை அல்பம் பாடப்பட்டபோது, அவரது 3 குழந்தைகளையும், ஜெனட் ஜக்ஸன் (ஜக்ஸனின் தங்கை) மேடைக்கு அழைத்து வந்தார். அப்போது, துக்கம் தாங்காமல் மைக்கல் ஜக்ஸனின் 11 வயது மகள் பாரீஸ் கத்தரீன் கதறி அழுதார். ஏதாவது பேசுமாறு அவரது அத்தை ஜெனட் அவரிடம் கூறினார்.

அதைத் தொடர்ந்து, ''நான் பிறந்தது முதலே, யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்குச் சிறந்த தந்தையாக எனது அப்பா இருந்தார். அவரை நான் மிகவும் நேசிக்கிறேன் என்று இந்த தருணத்தில் சொல்ல விரும்புகிறேன்'' என்று விம்மி விம்மி அழுதபடியே கத்தரீன் பேசியமை அனைவரதும் மனதை உருக்குவதாக இருந்தது. அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. அவர் தனது அத்தை ஜெனட் ஜக்ஸனின் கரங்களில் முகத்தை புதைத்துக்கொண்டார். அதனால், மைக்கல் ஜக்ஸனின் இறுதிச் சடங்கு இசை நிகழ்ச்சியே சோகமயமானது.

# தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது

## ஜனாதிபதி சர்தாரி

இஸ்லாமாபாத், ஜூலை 10

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது. பாகிஸ்தானில் தீவிரவாதிகள் உருவாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் முற்றும் முழுதாக ஒழிக்கப்பட்டுவிடும் - என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பாகிஸ்தான் சிவில் துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளின் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாம் அனைவரும் நமக்கு உண்மையாக இருக்க வேண்டும். அதன்படி, சில உண்மைகளை நாம் இதயபூர்வமாக ஒப்புக்கொள்வது அவசியமாகும். கடந்த ஆண்டுகளில் ஹீரோக்களாக பாராட்டப் பட்டவர்கள் தற்போது தீவிரவாதிகளாக இருக்கிறார்கள். தேசிய அளவில் தீவிரவாதிகள் பெருமளவில் உருவாகியுள்ளார்கள்.

அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறார்கள். அதனால் அவர்கள் தேசிய சவாலாக இருக்கிறார்கள். குறுகிய கால குறிக்கோள் அடிப்படையில் தீவிரவாதிகள் வளர்க்கப்படுகிறார்கள். நிர்வாகத் துறையினர் பலமின்றியும் தார்மீக உணர்வின்றியும் இருந்தமையால், தீவிரவாதிகள் வேகமாக வளர்ந்துள்ளனர்.

செப்டெம்பர் 11ஆம் திகதி இடம் பெற்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானைத் தீவிரவாதிகள் புகலிடமாக்கிக் [illegible] னில் ஊடுருவியுள்ள [illegible] யப்படுவார்கள். இதில் நாம் தீவிரமாக [illegible] - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலிலிருந்து மீனவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குக!

## சபையில் தமிழக எம்.பிக்கள் வலியுறுத்து


டி.ராஜா

டில்லி, ஜுலை 10

இலங்கைக் கடற்படையிடம் இருந்து இராமேஸ்வரம் மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் தமிழக எம்.பிக்கள் வற்புறுத்தினர்.

டில்லி மேல் சபையில், கேள்வி நேரம் முடிந்ததும் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் டி.ராஜா இந்த விவகாரத்தை முதலில் எழுப்பினார்.

இலங்கைக் கடற்படையினர் சமீபத்தில் 20 மீனவர்களைக் கைதுசெய்ததை கண்டித்து, இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தின் 4 படகுகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 100இற்கும் மேற்பட்ட மீனவர்களை காணவில்லை.


ரித்தீஷ்

இப்படிப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருவதால் இலங்கைக் கடற்படையினரிடம் இருந்து இந்திய மீனவர்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர் வற்புறுத்தினார்.

தமிழக மீனவர்கள் கச்சதீவைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும்படி இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும் என்று வற்புறுத்திய அவர், இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது எனக் குற்றஞ்சாட்டினார்.

உடனே காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜெயந்தி நடராஜன், ஞானதேசிகன் ஆகியோர் எழுந்து, உறுப்பினர் ராஜா, சபைக்குத் தவறான தகவல்களை தருகிறார் என ஆட்சேபனை தெரிவித்தனர்.

தொடர்ந்து பேசிய டி.ராஜா, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி, இலங்கை அரசுடன் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து கச்சதீவை மீண்டும் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ராஜாவின் கருத்தை தி.மு.க.வை சேர்ந்த திருச்சி சிவா, பா.ம.க.வின் டாக்டர் அன்புமணி ராமதாஸ், மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

நாடாளுமன்ற மக்களவையிலும் இராமேஸ்வரம் மீனவர்கள் பிரச்சினை எதிரொலித்தது. அந்த தொகுதியின் எம்.பி.யான ஜே.கே.ரித்தீஷ் (தி.மு.க.), இலங்கை கடற்படையினரின் சித்திரவதை காரணமாக, இராமேஸ்வரம் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலை நிறுத்தி வைத்து வேலைநிறுத்தம் செய்து வருவதைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ரித்தீஷ் எம்.பி. வற்புறுத்தினார்.




## சானியாவை தொந்தரவு செய்த பொறியியல் மாணவர் கைது!



ஐதராபாத், ஜுலை 10

இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவை, தான் காதலிக்கிறார் எனக் கூறி கடந்த செவ்வாயன்று இரவு சானியாவின் வீட்டுக்குச் சென்று கலாட்டா செய்த பொறியியல் மாணவரை பொலிஸார் கைது செய்தனர்.

சானியா - தொழிலதிபர் முகமது சொராப் நிச்சயதார்த்தம் ஐதராபாத்தில் இன்று நடக்கிறது.

இந்நிலையில், சானியா மிர்சாவை கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்ட முகமது அஷ்ரப் (வயது - 28) என்ற பொறியியல் மாணவர், சானியாவை தான் காதலித்து வருகிறார் எனவும், அதனால் நிச்சயதார்த்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் மிரட்டி வந்தார்.

மேலும், பஞ்சாரா ல்ஸ் பகுதியில் உள்ள சானியா வீட்டுக்கு செவ்வாயன்று இரவு சென்ற அந்த இளைஞர், நிச்சயதார்த்த நிகழ்ச்சியை நிறுத்துமாறு சானியாவின் தந்தையுடன் வாக்குவாதம் செய்தார். இதுபற்றி சானியா குடும்பத்தார் முறைப்பாடு செய்ததையடுத்து, அந்த இளைஞரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

# பாகிஸ்தானின் ஒவ்வொரு செயலையும் உன்னிப்பாகக் கவனிக்கிறது இந்தியா

## கிருஷ்ணா தகவல்



புதுடில்லி, ஜுலை 10

பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாதிகளின் செயற்கைக்கோள் தொலைபேசி உரையாடலை இந்தியா கேட்பதற்கு இடையூறு செய்ய பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள முயற்சியை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது - என்று மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்தியாவை மட்டுமல்ல, பாகிஸ்தானை பாதிக்கும் விடயமாக இருந்தாலும் அதுகுறித்து உரிய கவனம் செலுத்துவதை இந்தியா வழக்கமாகக் கொண்டுள்ளது. இதுபோல பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை வெளியுறவு அமைச்சகம் வழக்கமாகக் கொண்டுள்ளது.

இருப்பினும், பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாதிகள் பொதுவாக செயற்கைக்கோள் தொலைபேசிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். இதை இடைமறித்துக் கேட்பதன் மூலம் அவர்களது நடமாட்டத்தைக் கண்காணிக்க முடியும். அத்துடன் அவர்களது திட்டத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

ஆனால் தொலைபேசி உரையாடலை இடைமறித்து கேட்பதைத் திசைதிருப்பும் நடவடிக்கையில் பாகிஸ்தான் அரசு ஈடுபட்டுள்ளது. இதுபோல பாகிஸ்தான் மேற்கொள்ளும் எத்தகைய முயற்சியையும் இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இந்தியாவின் எல்லைப் பகுதிகள் உரிய கண்காணிப்புடன் பாதுகாப்போடு உள்ளன. பாகிஸ்தானுடன் நட்புறவு பாராட்டவே இந்தியா விரும்புகிறது. இதை இரு நாட்டுத் தலைவர்களும் உணர்ந்து, இரு நாடுகளும் வளம் பெறுவதற்கு எந்தெந்த வகைகளில் உதவலாம் என்பதை ஆராய்ந்து செயற்படுத்தினால் இரு நாடுகளும் வளம் பெறும் - என்றார்.

# இனிமேல் கதாநாயகனாக நடியேன்! நகைச்சுவை நடிகர் வடிவேல் பேட்டி



சென்னை, ஜுலை 10

படம் தோல்வியடைந்தால் என் மீது பழி போடுகின்றனர். எனவே, இனிமேல் கதாநாயகனாக நடிக்க மாட்டேன் - என்று நகைச்சுவை நடிகர் வடிவேல் கூறினார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைக்கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இதுவரை நான், 490 படங்களில் நடித்து விட்டேன். இப்போது தயாரிப்பிலுள்ள 'ஆதவன்,' என்னுடைய 490ஆவது படம். கொஞ்ச நாள்களுக்கு முன்பு என் உடம்பு அதிக எடை போட்டுவிட்டது. டான்ஸ் ஆட முடியவில்லை.

எனவே, உடற்பயிற்சி செய்தும், சாப்பாட்டின் அளவை குறைத்தும் உடம்பை மெலியவைத்தேன். இதுவரை 5 கிலோ குறைந்து இருக்கிறேன். இன்னும் கொஞ்சம் குறைக்க வேண்டும்.

இனிமேல் நான் கதாநாயகனாக நடிப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன். படம் தோல்வியடைந்தால், பழியை என் மீது போட்டு விடுகின்றனர்.

கதாநாயகனாக நடித்தால் பொறுப்பு முழுவதும் என் தலையில் விழுந்து விடுகிறது. பயம் - பீதியாக இருக்கிறது. வெறுத்துப்போய் விட்டேன். ஒரு படத்தில் கதாநாயகனாக நடித்து முடிப்பதற்குள் 10 படங்களில் நகைச்சுவை செய்துவிடலாம் - என்றார்.

# இலங்கை மீனவர் 53 பேர் விடுதலை

இராயபுரம், ஜுலை 10

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 53 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தியக் கடற்பகுதிக்குள் அனுமதியின்றி மீன் பிடித்த 9 படகுகளில் வந்த இலங்கை மீனவர்கள் 53 பேர், 45 நாள்களுக்கு முன்னர் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டு புதுவண்ணாரப்பேட்டை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் மீது இன்ஸ்பெக்டர் சி.ஜெய்சிங் வழக்குப் பதிவு செய்து, 53 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தினார். பின்னர் அனைவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு பெருநகர் குற்றவியல் 16 ஆவது நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடந்தது. வழக்கை நீதிபதி எஸ்.சுஜாதா விசாரித்தார். அவர், இலங்கை மீனவர்கள் 53 பேரையும் எச்சரித்து விடுதலை செய்து அவர்களது படகுகளையும் ஒப்படைத்து விடும் படி உத்தரவிட்டார்.

# ஐ.நா. சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வேண்டும்

## பிரதமர் வற்புறுத்து

ரோம், ஜுலை 10

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்து வழங்க வேண்டும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் வற்புறுத்தியுள்ளார்.

'ஜி-8', 'ஜி-5' மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன்தினம் இத்தாலியின் தலைநகர் ரோம் போய்ச் சேர்ந்த பிரதமர் மன்மோகன் சிங், பின்னர் அங்கிருந்து மாநாடு நடைபெறும் லக்கிலா நகருக்குச் சென்றார்.

பின்னர் அந்நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதை மறைமுகமாக வற்புறுத்தினார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஐ.நா. சபையில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இதற்காக இந்தியா தொடர்ந்து பாடுபடும். ஐ.நா. பாதுகாப்பு சபை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 2 அடுக்கு உறுப்பினர் முறை உள்ளது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளன. 2ஆம் உலகப்போரில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து இந்த நாடுகள் அந்தச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகள் ஆயின. அந்த நாடுகளுக்கு 'வீட்டோ' அதிகாரமும் உள்ளது. இது தற்போதுள்ள கால சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடியதாக இல்லை.



ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்த உறுப்பு நாடுகளாக உள்ள இங்கிலாந்து, பிரான்ஸை விட ஜேர்மனியும் ஜப்பானும் பொருளாதாரத்தில் வலுவான நாடுகளாக உள்ளன. பொருளாதார ரீதியில் வலுவாக உள்ள சில நாடுகள் பாதுகாப்புச் சபையில் இன்னும் நிரந்தர உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

மாறி வரும் உலக பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிய நிதிக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் - என்றார்.

# தமிழகக் கடலோரக் கிராம மக்களுக்கு ஒரு வருடத்தில் அடையாள அட்டை

## மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தகவல்

புதுடில்லி, ஜுலை 10

தமிழ்நாட்டில் கடலோரக் கிராம மக்களுக்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அடையாள அட்டை வழங்கப்படும் - என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.



டில்லி மேல் சபையில் நேற்றுமுன்தினம் கேள்வி நேரத்தின்போது பொதுமக்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தொடர்பாகப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஓர் அம்சமாக கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்நோக்கு அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, குஜராத், மராட்டியம், கோவா, கர்நாடகம், கேரளா, ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய 9 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, லட்சத்தீவுகள், அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய பிரதேசங்களிலும் வசிக்கும் கடலோரக் கிராம மக்களுக்கு 2 கட்டங்களாக பல்நோக்கு அடையாள அட்டைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அடையாள அட்டை தவிர மீன்வளத் துறை மூலமாக மீனவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு எனப்படும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் முறைப்படி தனியாகப் பதிவு செய்யப்படும்.

படகுகளுக்கு மானிய விலையில் டீசல் பெறுவது மற்றும் கூட்டுறவு சங்கங்களில் கடன் பெறுவது ஆகியவற்றுக்கு இந்த அட்டைகள் பயன்படும் - என்றார்.

# மரபணு மூலம் தமிழர்களின் தோற்றம் குறித்து ஆராய்ச்சி

மரபணுக்களின் மூலம் தமிழர்களின் தோற்றம், வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளவுள்ளோம் - என்று இந்தியத் தடயவியல் நிபுணர் பி. சந்திரசேகரன் கூறினார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

ஏற்கனவே இதுபோன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு மீண்டும் ஆராயும் போது புதிய, அரிய தகவல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. எங்கள் ஆராய்ச்சிக்கு உதவும்படி தமிழக அரசைக் கேட்கவுள்ளோம். மரபணு மாதிரிகளைக் கொண்டு ஆராயும்போது பண்டைய கால தமிழ் மக்களுக்கு நீரழிவு நோய் இருந்துள்ளதா என்பது போன்ற சுவாரசியமான தகவல்களைப் பெற முடியும் - என்றார்.

# தன்னிச்சையாக செயற்பட்டது அ.தி.மு.க. பின்னடைவைச் சந்தித்தன மார்க். - கம்யூ.

## வரதராஜன் குற்றச்சாட்டு

கோவை, ஜுலை 10

மக்களவைத் தேர்தல் பிரசாரத்தில் அ.தி.மு.க. தனது நிலைப்பாட்டையே தன்னிச்சையாக முன்னெடுத்துச் சென்றது. கூட்டணிக்கு தலைமை ஏற்ற அ.தி.மு.கவின் தவறான செயற்பாடுகள் காரணமாக இத்தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் என்.வரதராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து கோவையில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபா, விவசாயக் கடன் ரத்து, இலவச டி.வி. விநியோகம் போன்ற மக்கள் நலத் திட்டங்கள், மக்களவைத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ்கூட்டணியின்வெற்றிக்கு உதவின.

அ.தி.மு.கவுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டிருந்த கட்சிகள் இணைந்து கூட்டாக மாநில அளவிலான தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளவில்லை...

சேதுசமுத்திர... பிரச்சி...




னைகளில் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே மாறுபட்ட கருத்துகள் இருந்த நிலையிலும், அ.தி.மு.க. தனது நிலைப்பாட்டையே தேர்தல் பிரசாரத்தில் தன்னிச்சையாக முன்னெடுத்துச் சென்றது. கூட்டணிக்கு தலைமை ஏற்ற அ.தி.மு.கவின் தவறான செயற்பாடுகள் காரணமாக இத்தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மத்தியில் மூன்றாவது மாற்று அரசை ஏற்படுத்துவது என்ற முடிவை பிரசாரத்தின்போது அ.தி.மு.க. வலுவாக எடுத்துச் செல்லவில்லை.

5 பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு ... அறிவிக்கப்படும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்தனைப் பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டார். மணற்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து குடத்தனையில் வசிக்கும் மக்களைச் சந்தித்த அமைச்சர் அந்த மக்களின் பிரச்சினைகளை கேட்பதையும் அந்த மக்கள் மத்தியில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# மணற்காட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடத்தில் விரைவில் குடியமர்த்தப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

மணற்காடு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வெகுவிரைவில் மீள குடியமர்த்தப்படுவார்கள்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 7 ஆம் திகதி குடத்தனைப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் மணற்காடு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் மக்களை சந்தித்து அவர்களது தேவைகள் தொடர்பில் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் வறிய குடும்பங்களை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் உள்ளீடுகளை வழங்கும் நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, குடத்தனை ஆகிய பகுதிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தார்.

அதன்போது அப்பகுதி மக்களையும் சந்தித்து உரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை வருமாறு:-

எமது மக்களின் வாக்குரிமைகளை பெற்றும், பறித்துக்கொண்டும் நாடாளுமன்றம் சென்றவர்கள் தங்களது எதிர்ப்பு அரசியலாலும் சுயலாப நோக்கங்களாலும் எமது மக்களை பாரிய அழிவுகளுக்கு உட்படுத்திவிட்டனர். எமது மக்களின் உயிர் மற்றும் ஏனைய அழிவுகளுக்கும் இவ்வாறானவர்கள் பொறுப்புக் கூறவேண்டிய நிலையில் அந்தப்பொறுப்புக்களை எல்லாம் உதாசீனம் செய்துவிட்டுமீண்டும் எமது மக்களை எப்படி எல்லாம் ஏமாற்றலாம் என நினைத்து மக்கள் மத்தியில் வர எத்தனிக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் மட்டும் மக்களுக்கு காணக்கூடியதாகவுள்ள இவர்கள் கடந்த காலங்களில் எமது மக்கள் பலத்த பாதிப்புகளுக்கு உள்ளாகி இருந்த போது எங்கே சென்றார்கள்? இவ்வளவு காலமும் வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவிட்டு இப்போது வந்து எமது மக்களுக்காக கண்ணீர் வடிப்பதாகக் கூறும் இந்த சுயநலவாதிகளை எமது மக்கள் இனி அனுமதிக்கப்போவதில்லை.

எதிர்ப்பு அரசியல் எமது மக்களுக்கான நலன்களை ஒருபோதும் ஈட்டித்தரப் போவதில்லை. தற்போதைய எமது சூழ் நிலைக்கேற்ப இணக்க அரசியலை மேற்கொண்டு எமது மக்களுக்கான நலன்களை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (1)

# பரிசளிப்பு விழா

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.வசந்த சேனனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்கின்றனர். பரிசில்களை திருமதி பத்மினி வசந்தசேனன் வழங்குவார். (1-38)

# தென்மராட்சிக் கல்விவலயத்துக்கு இலவசப் பாடநூல்கள் வந்தன

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு வந்துள்ளன.

சகல பாடசாலை அதிபர்களும் உடனடியாக இப்புத்தகங்களைப் பெற்று விநியோகிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (204-207)

# ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## அரசின் முடிவும் அதுவாம்; அநுர பிரியதர்ஷன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 10

"ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படும் என்ற முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதியின் முடிவே அரசின் முடிவாகும்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக்கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே நாட்டின் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என 'ஹிந்து' பத்திரிகைக்கு அண்மையில் ஜனாதிபதி வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இக்கூற்று தொடர்பாக அரசின் கருத்து என்னவென ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' பத்திரிகைக்கு ஜனாதிபதி வழங்கிய பேட்டி அப்பத்திரிகையில் மிகவும் அழகாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எமது நாட்டிலுள்ள பத்திரிகைகளை விடவும் 'ஹிந்து' பத்திரிகை மிகவும் தரமான பத்திரிகையாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அரசு, அமைச்சர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவுள்ளது என இன்றைய பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள செய்தியை நானும் படித்தேன். அது முற்றிலும் பிழையானதாகும். அவ்வாறான எந்தத் தீர்மானத்தையும் அரசோ, அமைச்சரவையோ மேற்கொள்ளவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெலயில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (சி)

# இணுவில் குடும்பப் பெண் கொலை வழக்கில் நேற்று கணவன் மேல் நீதிமன்றத்தால் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 10

இணுவிலில் மனைவியை சித்திரவதை செய்து சேலையில் கட்டித் தூக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட கணவன் யாழ். மேல் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி தனது மனைவியான விஜயகுமாரியை துன்புறுத்தி கொலை செய்து சேலையில் கட்டித்தூக்கியதாக அவரது கணவனான குமாரதாஸ் மீது சுன்னாகம் பொலிஸாரால் மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த மல்லாகம்நீதிமன்றம் அதனையாழ்.மேல்நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியது.

இந்த வழக்கை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா விசாரணை செய்து நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

சம்பவததை நேரில் கண்டசாட்சியங்கள் இல்லை என்ற காரணத்தாலும் சாட்சியம் அளித்த எதிரியின் மகனின் சாட்சியம் முரண்பாடாக இருப்பதாலும் குற்றம் நிரூபிக்காத நிலையில் எதிரியை விடுதலை செய்வதாக நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

இவ்வழக்கில் எதிரிசார்பில் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசும் வழக்காளி சார்பில் அரச சட்டத்தரணி எஸ்.ஜெபநேசனும் ஆஜராகினர். (1)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா மீள்பரீட்சை

நல்லூர், ஜூலை 10

இலங்கை நூலக சங்கத்தின் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி மட்டம் I இற்கான மீள் பரீட்சைகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைககழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி லதா உமாசங்கர் அறிவித்துள்ளார்.

# முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை10

இருபாலை கற்பகப் பிள்ளையார் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் முன்பள்ளியின் போசகர் த. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. விமலநாதனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் க.இ.இராஜசேகரும் கலந்துகொள்வர். (1-7)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அதிபர், ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் 3 ஆம் தவணைக்குமுன் வெளியில் தங்க அனுமதி

## தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு கல்வியமைச்சர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், ஜூலை 10

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அதிபர், ஆசிரியர்களில் பெரும்பான்மையானவர்கள் மூன்றாம் தவணைக்கு முன்னர் வெளியில் தங்க அனுமதிக்கப்படுவர்.

கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் நடத்திய பேச்சுக்களின்போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் நிர்வாகச் செயலாளர் தி.கணேசராசா,மன்னார் மாவட்ட செயலாளரும் மத்திய குழு உறுப்பினருமான ஏ.மடுத்தின் ஆகியோர் கொண்ட குழு கல்வியமைச்சரை கொழும்பு அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியது.

இக் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் குறித்து தமிழர் ஆசிரியர் சங்க... வருமாறு:-

* இடைத்தங்கல் முகாமிலுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் ஏனைய திணைக்கள நிர்வாகிகள், ஊழியர்கள் ஆகியோர் படிப்படியாக முகாமுக்கு வெளியே வசிக்க அனுமதிக்கப்படுவர்.

* எனினும் முல்லைத்தீவு, மடு வலயக் கல்விப் பணிப்பாளர்களை விரைவில் முகாமிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை தான் உடனடியாக மேற்கொள்வதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

* இடைத்தங்கல் முகாமிலுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மனித நேய உதவிகளைச் செய்ய இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவை அனுமதிப்பதற்கும் தாம் சம்பந்தப்பட்ட பிரிவினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

* அடுத்த 2 வாரத்தினுள் 20,000 மக்கள் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மடு உதவி அரசாங்க அதிபர் பகுதிகளுக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக ...ங்கள் மீள்குடியேற்றம் ...வர். அப்பகுதிகளை நிரந்தரமாகக் கொண்ட அதிபர், ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள் ஆகியோரும் தமது வதி விடங்களில் குடியமர அனுமதிக்கப்படுவர். அத்துடன் அப்பகுதிகளில் இயங்கிய பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்படும்.

* அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட முகாமிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வவுனியாவில் அல்லது முகாமினுள் நேர்முகப் பரீட்சை நடத்த தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்ததோடு அவர்களுக்குரிய பதவி உயர்வுகள் எவ்வகையிலும் பாதிப்படையாத முறையில் நடவடிக்கைகளை தான் எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

* யாழ்ப்பாணத்தில் சேவையாற்றுவோரில் அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை எற்றுக்கொண்ட அமைச்சர் வவுனியா, மன்னார் மாவட்ட அதிபர் ஆசிரியர்களுக்கும் வவுனியாவில் நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்வதாகவும் உறுதியளித்தார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் பணிப்புரையைத் தொடர்ந்து தனது முதன்மை பணிகளை மீள் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் -

முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் தனது பணிகளை முற்றாக முடிவுக்கு கொண்டுவரவுள்ளதாகவும் செஞ்சிலுவை சர்வதேச குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க -

நாங்கள் ஐ.சி.ஆர்.சியை மட்டும் விசேடமாக குறிவைக்கவில்லை. சகல சர்வதேச தொண்டு நிறுவனங்களையும் அவற்றின் பணிகளைக் குறைக்குமாறு கேட்டுள்ளோம்.

இங்கு மேற்கொள்ளப்படும் பணிகள் பெறுமானம் உள்ளவையாக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் -

சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் தமது பணிகளை ஆற்றுவதற்குத் தகுதியான அலுவலர்கள் கிடைக்காத பட்சத்தில் மட்டுமே வெளிநாடுகளில் இருந்து அப்பகுதிகளுக்கு தருவிக்கலாம் என்றும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைக்குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற தீவிர மோதல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, இந்த நாட்டில் அதன் பணிகளைக் குறைத்துக்கொள்ளும்படி செஞ்சிலுவை சர்வதேசக்குழுவை (ஐ.சி.ஆர்.சி.) இலங்கை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

1989 முதல், இலங்கையில் ஐ.சி.ஆர்.சி. நிரந்தரமாகப் பிரசன்னமாகி இருந்துள்ளது. மாறிவரும் தேவைகளுக்கேற்ப கடந்த பல வருடங்களாக ஐ.சி.ஆர்.சியின் பங்களிப்பு இந்நாட்டில் இருந்துவந்துள்ளது. 1980களின் இறுதிப் பகுதியில் நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சி தொடர்பில் உண்டான தேவைகளில் அது தனது முதற் பணியை மேற்கொண்டது. அதன் பின்னர் இவ்வருட முதற்பகுதி வரை, அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள் தொடர்பில் ஏற்பட்ட மனிதாபிமானத் தேவைகளில் அது தனது பணிகளை மேற்கொண்டது.

**முதன்மைப் பணிகள் மீள் பரிசீலனை**

இலங்கையில் அதன் அமைவு மற்றும் அதன் முதன்மைப் பணிகள் பற்றிய மீள் பரிசீலனையை தற்போது ஐ.சி.ஆர்.சி. நடத்திக் கொண்டிருக்கிறது. அதன் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் தனது பணிகளை முடிவுக்குக் கொண்டுவந்து பணியகங்களை மூடிக் கொள்வதுடன் அதன் வெளிநாட்டு ஊழியர்களையும் அங்கிருந்து மீளப் பெற்றுக்கொள்கிறது.

இருப்பினும், மனிதாபிமான நிலவரங்கள் தொடர்பில் ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் இலங்கை அரசுடன் பேச்சுகளை நடத்திக் கொண்டிருக்கும் எனத் தெற்காசிய நாடுகளுக்கான ஐ.சி.ஆர்.சி. நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஜாக் டி மாய்ஓ தெரிவித்தார்.

ஐ.சி.ஆர்.சிக்குள்ள ஆணையதிகாரத்துக்கு அமைய, இடம்பெயர்ந்தோர் மற்றும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியோர் உட்பட அண்மைய மோதற் சூழ்நிலைகளால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டவர்களின் மனிதாபிமான தேவைகளில் உதவிட அர்ப்பணிப்புடன் உள்ளதாக அது மீண்டும் உறுதிப்படுத்துகிறது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## மோதல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிற்குப் பொருள்களைக் கொண்டு செல்வோரில், முன்னர் மோதல் நடைபெற்ற பகுதிகளுக்குச் செல்ல விரும்புபவர்களும், உள்ளூர், வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புகளும் முன் அனுமதியைப் பெறவேண்டும்.

இதற்கான அனுமதியை ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ணவிடமிருந்து பெற வேண்டும்.

கொழும்பின் ஊடக வர்த்தக மைய கட்டடத்தில் இயங்கும் அலுவலகம் மூலமாக இந்த நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்காக 011 2483322 என்ற இலக்கத்துடன் அல்லது தொலைநகல் 0112478326 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கூ.மொ.வி. நிவன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட சேதங்களை புனரமைத்து மீண்டும் கிளையை இயக்க அமைச்சர் குழு முடிவு செய்துள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்த்தனாவுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வந்திருந்தார். (1-111)

## வணங்காமண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இலங்கை அதிகாரிகள் இக்கப்பலை துறைமுகத்திற்குள் அனுமதித்துள்ளனர்.

'கொலராடோ' கப்பலின் உரிமை நிறுவனமான சீ.கொன்சோர்டியம் நிறுவனத்தின் அதிகாரி சுப்பிரமணியம் இதனைத் தெரி வித்துள்ளார்.

கப்பலில் உள்ள பொருள்களை இலங்கை அரசு ஏற்குமா என்பது உறுதியாகத் தெரியாததால், 'கொலராடோ'வை ஆழ்கடலில் நங்கூரமிடுமாறு கடற்படையினர் உத்தரவிட்டனர் என அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட கப்பலில் ஐரோப்பாவிற்கு அனுப்பப்படவேண்டிய 800 வர்த்தக கொள்கலன்களும் காணப்பட்டன. இவற்றை உரிய காலத்திற்குள் அனுப்பாவிட்டால், பல கோடி ரூபா நஷ்டமேற்படலாம் என்ற நிலையும் காணப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தாங்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவைத் தொடர்பு கொண்டனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை குழுவினரும் வேறு பலதரப்பட்டவர்களும் விடுத்த அழுத்தத்தைத் தொடர்ந்து கடற்படையினர் கப்பலை நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உள்ளே அனுமதித்துள்ளனர். (அ-சி)

## கரையோரக்காவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

கரையோரத்தைப் பாதுகாக்கும் கரையோர காவல் திணைக்களம் கடற்றொழில் அமைச்சின்கீழ் இருந்து வருகின்றது. இதற்குப் போதுமான அதிகாரங்கள் இல்லை.

கடல் மார்க்கமாக இடம்பெறும் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தி கடல் வளத்தைப் பாதுகாப்பது இத்திணைக்களத்தின் பிரதான கடமையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் இத்திணைக்களத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவது அவசியமாகின்றது. அதற்காகவே இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இத்திணைக்களத்திற்கு போதிய அதிகாரம் வழங்கப்படும். இதன் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அதிகாரம் வழங்கப்படும். தற்போதுள்ள ஊழியர்களில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது - என்றார்.

இச்சட்டமூலத்துக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்கள் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து சபையின் இணக்கத்தோடு இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. (சி)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் உட்பட விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டமை வட இலங்கையில் நடந்த இராணுவ மோதலுக்கு கிடைத்த முக்கியமான முடிவு என்று அவர் கூறினார்.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக பிரபாகரனும், பொட்டு அம்மானும் கொல்லப்பட்டு விட்டனர் என உத்தியோகபூர்வமாக உறுதி செய்யுமாறு இலங்கை அரசிடம் தாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்றும் இலங்கை அரசிடம் இருந்து பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் கிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கையின் இடம்பெயர்ந்தவர்களுக்கென 500 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு தங்குமிடங்களை ஏற்படுத்தி கொடுப்பதற்கு என இந்தியா 2 ஆயிரத்து 600 தொன் இரும்புக் கம்பிகளை இலங்கைக்கு அனுப்புகின்றது என்றும், நிலக்கண்ணிவெடி அகற்றும் நான்கு குழுக்களை அனுப்புகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்பான பிரச்சினை குறித்துப் பேசுகையில் இருநாடுகளுக்கிடையே கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை மதித்து நடக்கவேண்டும் என வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். (அ-சி)

## கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி முடித்த டிப்ளோமாதாரிகளில் ஆசிரிய நியமனம் பெறுவதற்காக பயணம் செய்ய இருப்பவர்களை இன்று வெள்ளிக்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்குச் சமுகமளிக்கும்படி மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (7)

## கடற்றொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நண்பகல் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பாக இச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. (அ-1)

## போரின் இறுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமரசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு -

யுத்தத்தின் இறுதிக்கட்ட நடவடிக்கைகளின்போது பொது மக்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது என பாதுகாப்பு வலயத்தில் இருந்த வைத்தியர்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டன. இதனால் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. சில சர்வதேச நாடுகள் இலங்கையை நோக்கி விரல் நீட்டின.

பாதுகாப்பு வலயத்தில் இருந்த வைத்தியர்கள் புலிகளின் அழுத்தம் காரணமாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுகின்றனர் என நாங்கள் வலியுறுத்திக் கூறினோம். சர்வதேச ஊடகங்களுக்கு விளக்கினோம். பாதுகாப்பு வலயத்தில் காணப்பட்ட நிலைமையை புரிந்து கொள்ளுமாறு கோரினோம்.

**இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்**

இந்நிலையில் பாதுகாப்பு வலயத்திலிருந்தவாறு சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிட்ட வைத்தியர்கள் தற்போது உண்மையை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே தற்போது சர்வதேசம் என்ன கூற விரும்புகின்றது என்று கேள்வியெழுப்புகின்றோம்.

இராணுவத்தினர் பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே பாதுகாப்பு வலயங்கள் மற்றும் பாதுகாப்பு பாதைகள் பிரகடனம் செய்யப்பட்டன.

இராணுவத்தினர் மனிதாபிமான நடவடிக்கைகளை மிகவும் ஒழுக்கமான முறையில் மேற்கொண்டனர். இப்போதாவது சர்வதேசம் உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (அ-சி)

அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT,HNDA,Bcom.BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 14.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
Closing Date 14.07.2009
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
DIT ⇨ HDIT ⇨ BIT
Further More
- MCS offers to BIT student computer engineering Course. You also achieve MCP & MCTS Professional membership from MICROSOFT
- MCS offers COMTIA A+ module totally free
- MCS offers ICDL (Computer Driving License)
- MCS offers CISCO-CCNA Course fees free
- E learning facilities also available
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

2ம் தவணை பரீட்சை வினாத்தாள்
தரம் 6 முதல் O/L வரைக்கான வினாத்தாள்கள் தேவையான தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் இன்று 10.07.2009 நேரில் தொடர்பு கொள்ளவும்.
BITSMANS
கல்வி நிறுவனம் மாவிட்டபுரம்.

LOGIC P.கமல்
A/L 2010
Paper Class
பிரிவு - I - 8 a.m.
பிரிவு - II - 9 a.m.
ஆரம்பம்: 11.07.2009 (Sat)
NEC Clock Tower Road, Jaffna
பெருமாள் கோயிலுக்கு அருகில்

விசேட கருத்தரங்கு
LOGIC By: P.கமல்
ஜூலை 24 பகுதி - I
ஜூலை 27 பகுதி - II
பாடக் குறிப்பு, வழிகாட்டல், ஆலோசனைகள் வழங்கப்படும்.
அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
NEC Clock Tower Road, Jaffna

போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
பொது உளச்சார்பு / பொது அறிவு
வங்கிகள் ஆட்சேர்ப்பு மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு ஏற்றது. வகுப்புக்கள் ஞாயிறு 2 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும்.
★ யாழ்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)

மாபெரும் கருத்தரங்கு
தமிழ்: திரு.குழந்தை
எதிர்பார்க்கைக்குரிய வினாக்கள்
வெளிமாணவர்கள் இடநெருக்கடியை தவிர்த்துக்கொள்ள இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
மு.கு. நிறுவனத்தில் நேரில் பெற்றுக்கொள்ளவும்
விஞ்ஞான கல்வி நிலையம்

PERSONAL CLASSES
364, Stanley Rd.(Near D.M.I)
GAQ/BA1/BA Final
தமிழ்-திரு.தர்மராஜா
Hin.Cul - திரு.சிறி
Drama - திரு.சிவகுமரன்
Eco - திரு.தயாபரன்
Pol.Sci - திரு.புவனதாஸ்
Spoken Sinhala 12 -1p.m
GAQ/BA-Part1 English
ஆரம்பமாகிவிட்டன.

CHEMISTRY S.Vasu
A/L 2011
புதிய பிரிவு
ஆரம்பம்:-11.07.2009
(Sat,Sun 4.30-5.30p.m)
A/L 2010
Paper Class
ஆரம்பம்:-11.07.2009
(Sat,Sun 5.30-6.30p.m)
NAVALAR JAFFNA

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
வெற்றித் தேர்வு பரீட்சை - 16
முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கிய மாதிரிப்பரீட்சை எதிர் வரும் 12.07.2009 ஞாயிறு நடைபெறும்.
வினாப்பத்திரம் திருத்திக் கொடுக்கப்படும். கூடிய புள்ளிகளைப் பெறும் ஐவருக்கு பரிசில்கள் வழங்கப்படும். வினாத்தாள் தெளிவுபடுத்தப்படும்.
தரம் :- 3,4 வெற்றித்தேர்வு வினாத்தாள்கள் தொடராக வெளிவருகின்றன.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி (நல்லூர் கோயில் முன்பாக)
★ உடன் பதிவு செய்யவும்
021 222 9016, 0773126807, 0775388471
வெற்றித்தேர்வு 16 செல்வாய் கடைகளில் பெறலாம்.

தாசன் கல்வி நிலையம்
THANSAN EDUCATION CENTER
TEC
யாழ்.குடாவின் உயர்கல்வி மாணவர் நலன் கருதி,
★ கணக்கியல், முகாமைத்துவ டிப்ளோமா
★ வங்கியியலின் CBF/DBF
★ வெளிவாரி வணிகப்பட்டத்தேர்வு
★ AAT
கற்கை நெறிகட்கான
I நிதி முகாமைத்துவம்
II கிரய/முகாமைக் கணக்கீடு
III உயர் நிதிக் கணக்கீடு
IV வரியியலும் கணக்காய்வும் விரிவுரைகள்
சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களிலும் மு.ப. 9 - பி.ப. 4 வரையும் வார நாள்களில் பிற்பகல் 4 - 5.30 கணக்கீட்டு/ முகாமை வல்லுனர்களின் வழிகாட்டலில் ........
101/10, ஸ்ரான்லி வீதி (மக்கள் வங்கி அருகாமை) யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன. அனுமதிக்கு அலுவலகத்தை உடன் நாடுங்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

நற்சிந்தனை

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

க.பொ.த.உயர்தர

# கல்விச்சுடர்

19

Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும் கல்வி இணைப்பிதழ்



யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில்
S.T.ஜனார்த்தனன் தொகுத்து வழங்கும்


## க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள் - 2009

## அசேதன இரசாயனம் - 01


★ ★ ★ இவ்வார இணைப்பிதழில்...

★ அசேதன இரசாயனம் ...(S.T. ஜனார்த்தனன்)

★ பௌதிகவியல் 01 இன் வினாத்தாளின் தொடர்ச்சி (கொ.தமிழ்ச்சங்கம்)

★ வணிகக்கல்வி வினாத்தாள் 01 (கொ.தமிழ்ச்சங்கம்) ...

★ பொருளியல் வினாத்தாள் 02 ............(V.முரளி)


### பகுதி - 1

01. மூலகங்களுக்கான சாரணுத்திணிவு கணிப்பதில் புதிய நியமம் எது?
1) $^{12}_{6}C$ 2) $^{16}_{8}O$ 3) $^{1}_{1}H$ 4) $^{14}_{7}N$ 5) $^{14}_{6}C$

02. A என்ற மூலகத்தின் சாரணுத்திணிவு 24 எனின், A இன் அணு ஒன்றின் திணிவு யாது?
1) 24amu 2) $24\times6.022\times10^{23}$amu
3) $24/6.022\times10^{23}$ amu 4) $1/12 \times 24/6.22\times10^{23}$amu
5) $24\times6.022\times10^{23}\times12$amu

03. A மூலக அணு ஒன்றின் திணிவு C-12 அணு ஒன்றின் திணிவின் 3 மடங்காகும். எனின், A இன் சாரணுத்திணிவு யாது?
